

ஆண்டு அறிக்கை
2018

அனர்த்த முகாமைத்துவ நிலயம்

© அமுநி 2018

அனர்த்த முகாமைத்துவ நிலயம்

வித்யா மாவத்த

கொழும்பு 07

இலங்கை

இணையத்தளம்:

www.dmc.gov.lk

மின் அஞ்சல்:

info@dmc.gov.lk

அவசர அழைப்பு

0112136222 / 2670002 / 117



உள்ளடக்கம்

01. நிறைவேற்று சுருக்கம் **1**

1.1 அறிமுகம் **1**

1.2 அனர்த் முகாமைத்துவத்துக்கான தேசிய சபை **1**

1.3 அனர்த்த முகாமைத்துவ விடயப்பரப்பின் கீழ் எடுக்கப்படும் இடர்கள் **2**

02. அனர்த்த முகாமைத்துவ நிலையம் பற்றிய சுருக்கமான அறிமுகம் **3**

2.1 நோக்கு, பணி மற்றும் நோக்கங்கள் **3**

2.2 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிகள் **3**

2.3 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனரீதியான கட்டமைப்பு **4**

2.4 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாட்குழுவினர **5**

2.4.1 பணியாட்குழுவினரை ஆட்சேர்த்தல **5**

2.4.2 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு **6**

2.5 2018 இல் இடம்பெற்ற அனர்த்த நிலைமைகள் பற்றிய பகுப்பாய்வு **7**

2.5.1 அனர்த்த தாக்க பகுப்பாய்வு - 2018 **7**

i. ஒட்டுமொத்த தாக்கம் - 2018 **7**

ii. உயிரிழப்புகள், காணாமற்போதல், காயமடைதல் **8**

iii. வீட்டு சேதங்கள் - 2018 **8**

iv. ஒவ்வொரு அனர்த்தம் காரணமாகவும் சேதமடைந்துள்ள / பாதிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை - 2018 **9**

v. உயிரிழப்புகள் / காணாமற்போனோர் மற்றும் காயமடைந்தோர் **10**

vi. " டிஸ்வென்ரா" (Desinventra) தரவுகளின் பிரகாரம் அனர்த்த தாங்கங்களின் சுருக்கம் - 2018 **11**

03. தேசிய மட்டத்திலான பிரதான செயற்பாடுகள் **11**

3.1 அனர்த் முகாமைத்துவ சட்டத்தை திருத்துதல் **11**

3.2 தேசிய அவசர கால கருமமாற்றல் திட்டம் (தே.அ.நி.கா.தி.) (NEOP) **11**

3.3 நிறுவன முன்ஆயத்த திட்டம் (IDMP) **12**

3.4 இடைக்கால் முகாமைத்துவ குழு (IMC) **12**

3.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு (AMC) **13**

3.6 தேசிய பாதுகாப்பு தினம் **14**

3.7 அவசர நிலைமை பதிலிருத்தல் குழு **14**

3.8 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளம் **14**

3.9 டிஸ்வென்ரா **(Desinventor)** தரவுக் களஞ்சியம் **14**

04. தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு **15**

4.1	அறிமுகம்	**15**
4.2	இப்பிரிவின் கடமைகள் மற்றும் விடயப்பொறுப்புகள்	**17**
4.3	பிரிவின் செயற்பாடுகள்	**18**
4.4	துறைசார் பொது செயற்பாடுகள்	**20**
4.5	2018ஆம் ஆண்டின் தேர்ச்சி	**20**
4.6	அனர்த்த தணிப்பு கருத்திட்டங்களை முன்னெடுத்தல்	**22**
4.7	அனர்த்த அபாய முகாமைத்துவத்தை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல்	**25**
4.8	அனர்த்த முகாமைத்துவ மதிப்பீடு	**28**
4.9	டிஸ்இன்வென்ரா **(Desinventra)** தரவுக்களஞ்சியம்	**29**
4.10	ரிக்ஸ்இன்வோ அபாயத் தகவல் இணையதளம் **(riskinfo web potal)**	**30**
4.11	செய்மதிப் புகைப்படங்களை பயன்படுத்தி அனர்த்தத்க்கு உட்பட்டுள்ள பிரதேசங்கள் மற்றும் தரவுகளை வெளிப்படுத்துதல்	**30**
4.12	மாவட்ட மட்டத்தில் பொதுமக்களின் முறைப்பாடு, கோரிக்கைகள், பிரேரணைகள், வினாவுதல்களுக்கு பதின் நல்குதல்	**31**
4.13	சவால்கள்	**33**
05. முன்னாயத்த மற்றும் திட்டமிடல் பிரிவு		**34**
5.1	அறிமுகம்	**34**
5.2	மாவட்ட மட்டத்திலான முன்னாயத்த திட்டம்	**35**
5.3	பிரதேச மட்டத்தில் சமூக முன்ஆயத்த பதிலிருப்பு நடவடடிக்கைகளை தயார் செய்தல்	**36**
5.4	சர்வதேச / தேசிய / மாவட்ட / பிரதேச மட்டத்திலான ஒத்திகை வேலைத்திட்டங்கள்	**36**
5.4.1	வலய மற்றும் தேசிய சுனாமி ஒத்திகை வேலைத்திட்டம் **(2018.09.05)** (IOWAVE – 2018)	**37**
5.5	கிராமிய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள " அனர்த்ததுக்கான முன்ஆயத்தம் " வேலைத்திட்டம்	**39**
5.6	பாரிய நீர்த்தேக்க அணைகளை அண்டியதான இடர்கள் தொடர்பிலான முன்ஆயத்த நடவடிக்கைகள்	**39**
5.7	நாட்டினுள் நீரிழ் மூழ்கியமையால் இடம்பெறும் உயிரிழப்புக்களை குறைத்தல்	**40**
5.8	வைத்தியசாலை அவசர முன்ஆயத்த திட்டங்களை தயார் செய்தல்	**40**
5.9	பாடசாலை அனர்த் பாதுகாப்பு வேலைத்திட்டம்	**41**
5.10	பிரதேச மட்டத்திலான பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம்	**41**
5.11	பருவப்பெயர்ச்சி முன்னாயத்த வேலைத்திட்டம் - தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச	**42**
5.12	தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் 2018-2030	**43**
5.13	உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி கருத்திட்டத்தின் தாக்கத்துக்கு உட்பட்டுள்ள பிரதேசங்களை அண்மித்த விசேட அனர்த்த முகாமைத்துவ திட்டம்)	**43**
5.14	பங்காளி நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள்	**44**
5.14.1	வானிலையுடன் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ வேலைத்திட்டம் **(CRIWM)**	**44**

5.14.2 பாடசாலை சுனாமி அனர்த்த ஒத்திகை நிகழ்ச்சித்திட்டம் 45

06. பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் பிரிவு 46

6.1 அறிமுகம் 46

6.2 தேசிய மட்டத்திலான பயிற்சி வேலைத்திட்டங்கள் 47

6.2.1 இலங்கையில் அனைத்து முகாமைத்துவ பொறிமுறையினை வினைத்திறனாகவும் பயனுறுதி மிக்கதாகவும் நாட்டினுள் செயற்படுத்துவதற்காக நீர்ப்பாசன மற்றும் நீர் வள அனர்த்த முகாமைத்துவ அமைச்சு சமூக வலுவூட்டல் மற்றும் நளநோன்புகை அமைச்சும் இணைந்து முன்னெடுக்கும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள 47

6.2.2 அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் தேசிய இளைஞர் அணி இணைந்து முன்னெடுக்கும் அனர்த்த முகாமைத்துவ இளைஞர் தொண்டர் குழுக்களை தாபிக்கும் வேலைத்திட்டம். 49

6.2.3 அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பில் பாடசாலை ஆசிரியர்களை அறிவுறுத்தும் தேசிய வேலைத்திட்டம் 51

6.2.4 அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு கண்காட்சிகள் ஊடாக விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் 52

6.2.5 முகாமைத்துவம் தொடர்பில் தொண்டர் குழுக்களை பயிற்றுவிக்கும் தேசிய வேலைத்திட்டம் 53

6.3 தேடுதல் மற்றும் மீட்பு வேலைத்திட்டங்கள் 54

6.4 இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையினை வினைத்திறனாகவும் பயனுறுதி மிக்கதாகவும் நாட்டினுள் முன்னெடுக்கும் பொருட்டு மாவட்ட மட்டத்தில் பிரதேச ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வேலைத்திட்டம் 55

6.5 ஊடகப் பேச்சுவார்த்தைகளை ஒழுங்கு செய்தல் 56

6.6 துண்டுப் பிரசுரங்கள் 57

6.7 மாவட்ட மட்டத்திலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள் 57

6.8 அனர்த்த முகாமைத்துவ நிலைய பனியால் குழுவினரது கொள்ளளவு அபிவிருத்தி வேலைத்திட்டம் 60

6.9 தேசிய பாதுகாப்பு தினம் 62

07. அவசர கருமமாற்றல் பிரிவு 63

7.1 அவசர கருமமாற்ற நிலையம் 63

7.2 அனர்த்தங்களுக்கு பதிலிருத்தல் 64

7.3 வெள்ளம் மற்றும் ஏனைய அனர்த்தங்களுக்கான அவசர பதிலிருப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான கருவிகளைக் கொள்வனவு செய்தல் 69

7.4 தேடுதல் மற்றும் மீட்பு பற்றிய அனர்த்த முகாமைத்துவ வதிவிட பயிற்சிப் பாடநெறி 70

7.5 அவசர நிலைமைகளின்போதான ஊடக ஒருங்கிணைப்பு 71

7.6 அவசர நிலைமைகளின்போது மும்படைகளுனான ஒருங்கிணைப்பு செயற்பாடுகள் 71

7.7 தேசிய அவசர கருமமாற்றல் திட்டம் (தே. அ. க.தி.) 72

7.8 தகவல் தொழிநுட்பம் மற்றும் தொடர்பாடல் / ஏனைய தொடர்பாடல்கள் 72

7.9 அழைப்புக் கூடம் 73

7.10 வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்டுள்ள அவசர கருமமாற்றல் பிரிவு சார்ந்த ஏனைய பணிகள் 73

08. நிதி மற்றும் கணக்கு பிரிவு 74

8.1 **2018** டிசெம்பர் மாதம் 31ஆந் திகதியிலான நிதித் தேர்ச்சி **74**

09. அனர்த்த முகாமைத்தவ நிலையத்தின் 2018 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான 2018 ஆம் ஆண்டு 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12வது பிரிவின் கீழான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை **96**

1. நிறைவேற்று சுருக்கம்

1.1 அறிமுகம்

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவத்துக்கான பிரதான நிறுவனம் அனர்த்த முகாமைத்துவ நிலையமாகும். குறிப்பிட்ட அனைத்துத் தரப்பினரதும் உதவியுடன் அனர்த்தங்களைக் குறைப்பதற்காக தேசிய மற்றும் பிரதேச அடிப்படையில் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.


இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் செயற்படும் நிறுவனமாக 2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் 13வது பிரிவின்படி இந்த நிறுவனம் நிறுவப்பட்டது. தேசிய கொள்கைகளைத் திட்டமிடல் மற்றும் மூலோபாய வழிகாட்டல்கள் தொடர்பான பணி தேசிய சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் அதற்கான வழிகாட்டல் வழங்கப்படுகின்றது. பதில் நடவடிக்கைகளுக்கான பொறிமுறைக்கு அப்பால்பட்ட வகையில் சிறந்த அணுகுமுறை ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் புதிய கொள்கைகளுக்கமைய இலங்கையின் ஒட்டுமொத்த அனர்த்த முகாமைத்துவத்தை முழுமையாக உள்வாங்கி அனர்த்த பாதிப்புக்களைக் குறைப்பதற்கான கட்டமைப்பாக 2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க சட்டம் கருதப்படுகின்றது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதான பணிகளாவன அனர்த்த பாதிப்புக்களைக் குறைத்தல், முன் ஆயத்த திட்டமிடல், மக்களுக்கு அறிவூட்டல், பாதிப்புக்குள்ளான மக்களுக்கு முன்னெச்சரிக்கைகளை விடுத்தல், அவசர கால கருமமாற்றல் நடவடிக்கைகள் மற்றும் ஏனைய பிரதான நிறுவனங்களுடன் இணைந்து நிவாரணங்கள் மற்றும் அனர்த்தங்களுக்குப் பின்னரான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலாகும். பிதேச மட்டத்திலான இடர் அபாய நிலைமைகளை குறைக்கும் நடவடிக்கைகளை சகல மாவட்டங்களிலிலும் செயற்படுத்துவதற்காக மாவட்ட இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் தாபிக்கப்பட்டுள்ளன.

1.2 அனர்த் முகாமைத்துவத்துக்கான தேசிய சபை

2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தினால் பொறுப்பளிக்கப்பட்டடுள்ள அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபையானது 2005ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டுள்ளது. இது அனர்த்த முகாமைத்துவத்தின் தலைமை நிலையமாகக் காணப்படுவதுடன், இது அதிமேதகு ஜனாதிபதியின் தலைமைத்துவம் மற்றும் கௌரவ பிரதமரது உப தலைமைத்துவத்துடனான உயர் மட்டத்திலான அனைத்து அமைத்துக்களினதும் பிரநிதித்துவத்தைக் கொண்டுள்ள ஒரு நிறுவனமாகும். அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையின் ஏனைய அங்கத்தவர்களாக, சட்டத்தில் முக்கியமாக குறிப்பிடப்பட்டுள்ள தெரிவு செய்யப்பட்டுள்ள விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள், மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் (முதலமைச்சருக்கு பங்கேற்க முடியாத பட்சத்தில் குறிப்பிட்ட மாகாண சபையின் ஆளுநர்) மற்றும் பாராளுமன்றத்தின் எதிர்கட்சியைச் சேர்ந்த ஐந்து பேர் கொண்ட குழு காணப்படுகின்றது.
(குறிப்பு 1.1)

அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் கட்டமைப்பு



குறிப்பு 1.1- தேசிய சபையின் கட்டமைப்பு

1.3 அனர்த்த முகாமைத்துவ விடயப்பரப்பின் கீழ் எடுக்கப்படும் இடர்கள்

2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவத்தின் கீழ் எடுக்கப்படும் இடர்கள் பின்வருமாறாகும்,

- மண்ணரிப்பு
- புயல் காற்று
- வெள்ளம்
- வறட்சி
- கைத்தொழில் அனர்த்தம்
- சுனாமி
- பூமியதிர்ச்சி
- வான் இடர்கள்
- கடல் வழி இடர்கள்
- தீ
- வைரசு வியாதி
- வெடிப்புகள்
- வான் தாக்குதல்
- சிவில் அல்லது உள்ளக பிரச்சினைகள்
- இரசாயன விபத்துக்கள்
- கதிர் வீச்சு தொடர்பான அவசர நிலைமைகள்
- உள்ளக மற்றும் கடல் வழி கசிவுகள் உள்ளிட்ட எண்ணெய்க் கசிவுகள்
- அணுசக்தி அனர்த்தங்கள்
- நகர மற்றும் காட்டுத் தீ
- கடலரிப்பு
- டொனாடோ, மின்னல் தாக்குதல் மற்றும் பலத்த இடியுடன் கூடிய மழை

2. அனர்த்த முகாமைத்துவ நிலையம் பற்றிய சுருக்கமான அறிமுகம்

இலங்கையை பாதுகாப்பான ஒரு சமூகமாக உருவாக்குவது, அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள ஒரு தேசிய கடமையாகும். இதற்காக பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் ஆறு பிரிவுகளை உள்ளடக்கியதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொழிற்பாட்டு பொறிமுறை தயார் செய்யப்பட்டுள்ளது.

1. அனர்த்த தணிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
2. முன்ஆயத்த மற்றும் திட்டமிடல் பிரிவு
3. பயிற்சி மற்றும் அறிவுறுத்தல் பிரிவு
4. அவசர கருமமாற்றல் மற்றும் அபாய முன்னெச்சரிக்கைப் பிரிவு
5. மனிதவளப் பிரிவு
6. நிதிப் பிரிவு

இத்தேசிய பொறுப்பினை நாடு பூராகவும் செயற்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கீழ் அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தாபிக்கப்பட்டு, அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையானது வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நாட்டினுள் முன்னெடுக்கப்படுகிறது.

2.1 நோக்கு, பணி மற்றும் நோக்கங்கள்

நோக்கு

இலங்கையில் பாதுகாப்பான சமுதாயமொன்றை ஏற்படுத்துவன் மூலம் நிலையான அபிவிருத்தியை அடைதல்

புணி

இயற்கை, தொழிநுட்பம் மற்றும் மனிதர்களின் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களை சீராக முகாமைத்துவம் செய்வதன் மூலம் ஒட்டுமொத்த தேசத்தினரதும் பாதுகாப்பான கலாச்சரமொன்றை உருவாக்குவதல்.

நோக்கம்

அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சபைகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மாவட்டங்கள், பிரதேச செயலகப் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் ஆகிய நாடளாவிய நிருவாக கட்டமைப்பின் மூலம் பின்வரும் பணிகளை ஒருங்கிணைத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.


2.2 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிகள்

- தேசிய கொள்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டமொன்றையும், தேசிய அவசர கால திட்டமொன்றையும் வகுத்தல்.
- அனர்த்தங்களை வரைபடங்களில் உள்ளடக்குதல் மற்றும் அனர்த்த பாதிப்புக்களை மதிப்பிடலும்
- பயிற்சி மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்

- முன்ஆயத்த திட்டங்களை தயாரிப்பதற்காக அரச நிறுவனங்களுக்கு உதவுதல் உட்பட அனர்த்தங்களின்போதான பதில் நடவடிக்கைகள் மற்றும் முன்ஆயத்தங்களைச் செய்தல்
- முன் அனர்த்த எச்சரிக்கைகளை விடுத்தல் மற்றும் அவற்றை பிரச்சாரம் செய்தல்
- அவசர கால நிலமைகளின்போதான கருமமாற்றல்களை முகாமைத்துதவம் செய்தல் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
- நிவாரணப் பொருட்களைப் பகிர்ந்தளித்தல் உட்பட் அனர்த்தத்துக்குப் பின்னரான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- அனர்த்தங்களைத் தணித்தல்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள்
- அனர்த்த ஆபத்துக்களைக்குறைத்தல் மற்றும் அதனை அபிவிருத்திப் பணிகளில் உள்ளடங்குதல்
- காலநிலை மாற்றங்களுடன் இசைந்து செல்லும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல்
- உரிய நேரத்தில் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தலும், அனர்த்த பாதிப்புக்களைக் குறைக்கும் பணிகள் தொடர்பாக அமைச்சுக்கள், அரச அதிகாரிகள், தாபனங்கள், தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல்
- அனர்த்த பாதிப்புக்களைக் குறைத்தல், அது தொடர்பான பதில் நடவடிக்கைகளை அனர்த்தங்களை அனர்த்தங்களின் பின்னர் வழமை நிலமைக்கு கொண்டு வருவதற்காக வெளிநாட்டு நன்கொடைகளை ஒருங்கிணைத்தலும் நடைமுறைப்படுத்துதலும்

2.3 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனரீதியான கட்டமைப்பு

குறிப்பு **2.1** குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நிறைவேற்றப்படுகின்ற பல்வேறுபட்ட பணிகள் மற்றும் வேலைத்திட்டங்களைக் கருத்தில் கொண்டு இந்த நிறுவனக் கட்டமைப்பானது தயார் செய்யப்பட்டுள்ளது.



குறிப்பு **2.1:** அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனக் கட்டமைப்பு

2.4 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாட்குழுவினர்

2.4.1 பணியாட்குழுவினரை ஆட்சேர்த்தல்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திதனால் அங்கீகரிக்கப்பட்டடுள்ள புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம், பணியாட்குழுவினர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்பதுடன், வருட இறுதியில் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட ரீதியில் காணப்பட்டுள்ள வெற்றிடங்களில் **35.1%** ஆட்சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

2018.12.31 ஆந் திகதியிலான புதிய ஆட்சேர்புகள்

ஊழியர்களின் வகை	அங்கீகரிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை	மெய் ஊழியர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்களின் எண்ணிக்கை
பணிப்பாளர் நாயகம்	**1**	**1**	**0**
மேலதிக பணிப்பாளர் நாயகம்	**1**	**1**	**0**
பணிப்பாளர்	**6**	**3**	**3**
உள்ளக கணக்காளர்	**1**	**1**	**0**
பிரதிப் பணிப்பாளர்	**18**	**0**	**18**
உதவிப் பணிப்பாளர்	**15**	**14**	**1**
உதவிப் பணிப்பாளர் (மாவட்டம்)	**25**	**25**	**0**
கணக்கீட்டு உத்தியோகத்தர்	**1**	**1**	**0**
நிருவாக உத்தியோகத்தர்	**1**	**0**	**1**
பிரத்தியேக உதவியாளர்	**1**	**0**	**1**
விசாரணை உத்தியோகத்தர்	**1**	**0**	**1**
தூரத்தை கணித்தல் / புவியியல் தகவல் முறைமை பகுப்பாய்வு	**1**	**0**	**1**
தகவல் முறையை பகுப்பாய்வாளர்	**1**	**1**	**0**
தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர்	**1**	**0**	**1**
முறைமைய கட்டுப்பாட்டு நிருவாகி	**1**	**0**	**1**
நூலக அதிபர்	**1**	**1**	**0**
அபிவிருத்தி உத்தியோகத்தர்	**101**	**1**	**100**
மொழிபெயர்ப்பாளர்	**2**	**0**	**2**
தகவல் தொழிநுட்ப உதவியாளர்	**6**	**6**	**0**
அசையும் மற்றும் அசையா கெமரா கலைஞர்	**1**	**1**	**0**
தொடர்பாடல் தொழிநுட்பக் கலைஞர்	**3**	**3**	**0**
வானொலி இயக்குநர்	**1**	**1**	**0**
முகாமைத்துவ உதவியாளர் / அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்	**201**	**201**	**0**
சாரதி	**39**	**38**	**1**
அலுவலக உதவியாளர்	**35**	**35**	**0**
மொத்தம்	**465**	**334**	**131**

அட்டவணை **2.1: 2018.12.31** ஆந் திகதியிலான பணியாட்குழுவினர்

பதவி	எண்ணிக்கை
உதவிப் பணிப்பாளர் (தணித்தல்)	**1**
உதவிப் பணிப்பாளர் (மாவட்டம்)	**6**
விசாரணை உத்தியோகத்தர்	**1**
நிருவாக உத்தியோகத்தர்	**1**
நூலக அதிபர்	**1**
முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பமல்லாத)	**28**
முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பம்)	**1**
சாரதி	**2**
அலுவலக உதவியாளர்	**5**

அட்டவணை 2.2: 2018.12.31 ஆந் திகதியிலான புதிய ஆட்சேர்புகள் கோருதல்

2018.12.31 ஆந் திகதிக்கு விண்ணப்பப்படிவங்களை கோருதல்

பதவி	எண்ணிக்கை
பணிப்பாளர் (மனித வளம்)	**1**
பணிப்பாளர் (நிதி)	**1**
பிரதி பணிப்பாளர்	**15**
நூலக அதிபர்	**1**
தூரத்தை கணித்தல் / புவியியல் தகவல் முறைமை பகுப்பாளர்	**1**
முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பம்)	**1**
முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பமல்லாத)	**25**

அட்டவணை **2.3: 2018.12.31**ஆந் திகதியிலான விண்ணப்பப்படிவம் கோருதல்

நிலையத்தில் காணப்படும் பணிப்பாளர் பதவிக்கான 03 வெற்றிடங்களில் பணிப்பாளர் (அவசர கருமமாற்றல்) பதவியில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் 02 வருட காலத்துக்காக இணைக்கப்பட்டுள்ளரென்பதுடன், பணிப்பாளர் (மனித வளம் மற்றும் நிருவாகம்) மற்றும் பணிப்பாளர் (நிதி) பதவியில் பதில் கடமையாற்றும் அடிப்படையில் ஒருங்கிணைந்த நிருவாக சேவையிலான இரு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

100 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் 2017ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப இதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயார் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், தற்போது குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **2018.12.31** ஆந் திகதியிலான பணியாட்குழு வெற்றிடங்களை நிரப்புவதற்காக அங்கீகாரம் பெறப்பட்டு 2019ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் குறிப்பிட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.


2.4.2 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு

இந்தப் பிரிவு 25 மாவட்டங்களிலும் அமைந்துள்ளது. இந்த ஒவ்வொரு மாவட்ட ஒருங்கிணைப்பு பிரிவுகளிலும் பதவியணியானது, உதவிப் பணிப்பாளர் (மாவட்டம்) மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்களை உள்ளடக்கியிருக்கும். மாவட்டம் அனர்த்தங்களுக்கு உள்ளாகக் கூடிய சாத்திய நிலமைக்கேற்ப மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை வேறுபடும். ஒட்டுமொத்தமாக எடுத்து நோக்குமிடத்து உதவிப் பணிப்பாளர்கள் (மாவட்டம்) 25பேர்,

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்கள் 100பேர், 25 மாவட்டங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளில் இராணுவத்தினர் மற்றும் விமானப் படையினர் இணைக்கப்பட்டுள்ளனர். களுத்துறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் மாவட்ட செயலகங்களில் நிறுவப்பட்டுள்ளன. பின்வரும் உருவத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பொறிமுறை காட்டப்பட்டுள்ளது.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பொறிமுறை கீழே உரு 2.2இல் காட்டப்பட்டுள்ளது.



அட்டவணை **2.2:** மாவட்ட அனர்த்த முகாமைத்துவம்

2.5 2018 இல் இடம்பெற்ற அனர்த்த நிலைமைகள் பற்றிய பகுப்பாய்வு


2.5.1 அனர்த்த தாக்க பகுப்பாய்வு - 2018


i. ஒட்டுமொத்த தாக்கம் - 2018


2018இல் வெள்ளம், மண்சரிவு, கடும் புயல், தீப்பிடித்தல் மற்றும் இடி மின்னல் தாக்கத்துக்கு ஆளானவர்களின் எண்ணிக்கை சுமார் **492,852** ஆகும். வறட்சியினால் மாத்திரம் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை **925,947** ஆகும். கடந்த 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், மேற்குறிப்பிட்ட தாக்கங்களுக்கு ஆளனவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. மரணமடைந்த மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை முறையே 62 மற்றும் 110 ஆகும்.

ii. உயிரிழப்புகள், காணாமற்போதல், காயமடைதல்

2017 உடன் ஒப்பிடுகையில், சேதமடைந்துள்ள மற்றும் அழிவடைந்துள்ள வீடுகளின் எண்ணிக்கையில் கருத்தில் கொள்ளக் கூடியளவு குறைவு ஏற்பட்டுள்ளது.







குறிப்பு - மேற்குறிப்பிட்ட குறிப்பு காரணமாக வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை.


குறிப்பு :
அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள நபர்களின் புள்ளிவிபரங்களை முன்வைக்கையில் திரண்ட மொத்தம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

உதா- குறிப்பிட்ட ஒரு நபர் ஒரு ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிட்ட அனர்த்தத்தமொன்றினால் இரு தடவைகள் பாதிக்கப்பட்டடிருப்பின், மொத்தம் 02 எனக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.


iii. வீட்டு சேதங்கள் - 2018

2018இல் மே மாத்திலேயே கூடிய வீட்டு தேசங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. கடும் புயல் மற்றும் பெரு வெள்ளம் காரணமாக பாரியளவிலான பாதிப்புக்கள் இடம்பெற்றுள்ளதுடன், இதன எண்ணிக்கை 5,364 ஆகும். கொழும்பு பிரதேசத்திலேயே அதிகளவிலான வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதாவது, வெள்ளம் காரணமாக 2,271 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.


கேகாலை, புத்தளம், இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் கருத்தில் கொள்ளத்தக்க அளவிலான வீட்டு தேசங்கள் இடம்பெற்றுள்ளன.




iv. ஒவ்வொரு அனர்த்தம் காரணமாகவும் சேதமடைந்துள்ள / பாதிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை - 2018



அட்டவணை **2.3**: அனர்த்தங்களினால் சேதமடைந்துள்ள வீடுகள்




அட்டவணை **2.4:** முழுமையாக சேதமடைந்துள் வீடுகள்



அட்டவணை **2.5:** பகுதியளவில் சேதமடைந்துள்ள வீடுகள்


v. உயிரிழப்புகள் / காணாமற்போனோர் மற்றும் காயமடைந்தோர்

வெள்ளம் காரணமாக மே மாத்தில் அதிகூடிய உயிரிழப்புக்கள் மற்றும் காணமற்போதல்கள் பதியப்பட்டுள்ளன. இடி மின்னல் தாக்கியதினால் பொலன்னறுவை மாவட்டத்தில் அதிகளவிலான மரணங்கள் இடம்பெற்றுள்ளதுடன், குருநாகல், புத்தளம் , கம்பஹ ஆகிய மாவட்டங்களிலும் அனர்த்தங்கள் காரணமாக கணிசமானளவு அதிகளவிலான காணாமற்போதல்கள் மற்றும் மரணங்கள் இடம்பெற்றுள்ளன. ஜூலி மாத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையான காயமடைந்தோர் பதிவு செய்யப்பட்டுள்ளரென்பதுடன், இது பலத்த காற்று காரணமாக இடம்பெற்றுள்ளது.



குறிப்பு **2.6:** உயிரிழப்புகள், காணமாமற்போதல்கள் மற்றும் காயமடைதல்கள்

2018 இல் அதிகூடிய உயிரிழப்புகள் வெள்ளம் காரணமாக ஏற்பட்டுள்ளன. இது **19%** ஆகும். இடி மின்னல் தாக்குதல் மற்றும் விலங்குகளின் தாக்கம் காரணமாக இடம்பெற்றுள்ள உயிரிழப்புக்களின் எண்ணிக்கை முறையே **12%** மற்றும் **10%** ஆகும்.



குறிப்பு **2.7:** அனர்த்தங்களினால் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் மற்றும்

vi. "டிஸ்வென்ரா" (Desinventra) தரவுகளின் பிரகாரம் அனர்த்த தாங்கங்களின் சுருக்கம் - 2018

- 2018ஆம் ஆண்டில் அதிகளவில் பாதிக்கப்பட்ட மக்களைக் கொண்டுள்ள மாவட்டங்களாக புத்தளம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் குருநாகல் ஆகியன காணப்படுகின்றன.
- மக்கள் கணிசமானளவில் பாதிக்கப்பட்டுள்ள ஏனைய மாவட்டங்களாக மன்னார், கம்பஹ, மற்றும் முல்லைத்தீவு ஆகியவற்றைக் குறிப்பிட்ட முடியும்.
- ஒட்டுமொத்தமாக நோக்குகையில், 2018இல் வெள்ளம் காரணமாக 23 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வறட்சி காரணமாக 18 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.
- ஒட்டுமொத்தமாக நோக்குகையில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் வறட்சி காரணமாகவும், வடக்கு மற்றும் மேற்கு மாகாணங்கள் வெள்ளம் காரணமாகவும் அனர்த்தங்கங்களுக்கு முகம்கொடுத்துள்ளன.

3. தேசிய மட்டத்திலான பிரதான செயற்பாடுகள்

3.1 அனர்த் முகாமைத்துவ சட்டத்தை திருத்துதல்

2005 ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை திருத்தும் பணியானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், திருத்தப்பட்டுள்ள சட்டமூலமானது சட்டமாஅதிபரின் அனுமதிக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

3.2 தேசிய அவசர கால கருமமாற்றல் திட்டம் (தே.அ.நி.கா.தி.) (NEOP)

தேசிய அவசர கால கருமமாற்றல் திட்டமொன்றை தயாரிக்கும் தேவைப்பாடானது 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இடர் முகாமைத்துவ சட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தேசிய அவசர கால கருமமாற்றல் திட்டத்தின் மூலம் நாட்டில் இடர்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் தெளிவுபடுத்தப்படுட்டுள்ளதுடன், இலங்கையினுள் ஏற்படும் வானிலை, நீர், தொழிநுட்ப மற்றும் மனிதர்களினால் ஏற்படுத்தப்படுகின்ற அனர்த்தங்களுக்கான பதில் நல்கும் ஒரு பொறிமுறை

உருவாக்கப்படுகின்றது. தேசிய அவசர கால கருமமாற்றல் திட்டத்தை ஆய்வு செய்தலுக்கு வசதிப்படுத்தும் முகமாக தேசிய அவசர கால கருமமாற்றல் திட்டம் தொகுதி -1 மற்றும் தொகுதி -2 என மும்மொழிகளிலும் தயார் செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தின் சாத்தியப்பாடு மற்றும் நிரந்தர பொறுப்புகளை விஞ்சுகின்ற வகையிலான ஒரு அவசர நிலைமையின்போது நிறுவனம் மற்றும் ஆட்களுக்கு பொறுப்புக்களைக் கையளிக்கும் முகமாக வசதி நல்குதல், அபாய முன்னெச்சரிக்கை பொறிமுறையை செயற்படுத்துதல் மற்றும் அவசர தேவை கருமமாற்றல் தேசிய அவசர கால கருமமாற்றல் திட்டம் தொகுதி -1இன் மூலமும், நிறுவன பொறுப்புக்கள் மற்றும் விடயப்பொறுப்புக்கள், தேசிய அவசர கால கருமமாற்றல் திட்டம் தொகுதி -2இன் மூலமும் விபரிக்கப்பட்டுள்ளன.

மும்மொழியிலும் தயார் செய்யப்பட்டுள்ள தேசிய அவசர கால கருமமாற்றல் திட்டத்துக்கு எதிர்காலத்தில் அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் வரையில் தேசிய அவசர கால கருமமாற்றல் திட்டம் தொகுதி -1இனை வழிகாட்டியாகக் கொண்டு அவசர கருமமாற்றல் கூடத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இடைக்கால முகாமைத்துவ குழு உடன்பாடு தெரிவித்துள்ளது.

3.3 நிறுவன முன்ஆயத்த திட்டம் (IDMP)

2005 ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம், நிறுவன அனர்த்த முகாமைத்துவ திட்டத்துக்கான வழிகாட்டல்களை தயார் செய்வதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு, வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் ஆகியவற்றுடன் இணைந்து வழிகாட்டல்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. குறிப்பிட்ட வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், பிரதான 10 பங்காளி நிறுவனங்களுடக் வதிவிட செயலமர்வொன்று ஒழுங்கு செய்யப்பட்டு குறிப்பிட்ட வழிகாட்டல் செயற்பாடுகள் தொடர்பில் நிறுவனரீதியாக அவதானிப்புகள் வழங்கப்பட்டன. இறுதி வழிகாட்டல் இடைக்கால முகாமைத்துவ குழுவின் அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்பட்டு, மீண்டும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் இலங்கை மின்சார சபை, இலங்கை அணுசக்தி ஒழுங்குமுறைப்படுத்தல் சபை, சுகாதார அமைச்சு, பொலிஸ் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்காக முன்வைக்கப்பட்டுள்ளதுடன், இதற்கமைய, சுகாதார அமைச்சு, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை அணுசக்தி ஒழுங்குமுறைப்படுத்தல் சபை ஆகியன வழிகாட்டல்களை தயார் செய்துள்ளன. ஏனைய நிறுவனங்களும் தற்போது வழிகாட்டல்களை தயார் செய்த வண்ணம் உள்ளன. இதன் அமுலாக்கலில் ஏதேனும் குறைபாடுகள் மற்றும் சிக்கல்கள் காணப்படுமாயின் அவற்றை மீள்திருத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

3.4 இடைக்கால் முகாமைத்துவ குழு (IMC)

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் கருமமாற்றல் செயற்பாட்டுக் குழுவானது இடைக்கால முகாமைத்துவ குழு என அழைக்கப்படுகின்றது, இது அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரது தலைமையில் 2018ஆம் ஆண்டில் 08 கூட்டங்களை நடாத்தியுள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவ குழுவின் கூட்டமைவு பின்வருமாறாகும்.

1) செயலாளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு - பிரதிநிதி- அங்கத்தவர்
2) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு - பிரதிநிதி - அங்கத்தவர்

3) பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு - பிரதிநிதி - அங்கத்தவர்
4) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு - பிரதிநிதி - அங்கத்தவர்
5) பணிப்பாளர் நாயகம், தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு - அங்கத்தவர்
6) தலைமை கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு - அங்கத்தவர்
7) பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் - செயலாளர்

3.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு (AMC)

அனர்த் முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாடுகளை கணக்காய்வு உட்படுத்தும் செயற்பாடுகள் தொடர்பிலான கணக்காய்வு ஆலோசனை கருமமாற்றல் குழுவானது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு எனப்படுகின்றது. 2018 டிசெம்பர் 31ஆந் திகதியிலான அங்கத்தவர்களின் கூட்டமைவு பின்வருமாறாகும்.

திரு.ஏ.வீ.ஜனாதர (தவிசாளர்)	-	பணிப்பாளர், திறைசேரி வரவு - செலவு திணைக்களம், பொதுத்திறைசேரி
பேராசிரியர். எஸ்.அமலநாதன் (அங்கத்தவர்)	-	பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம்
திரு.எச்.யூ.ஆர். பொன்சேக்கா (அங்கத்தவர்)	-	தலைமை கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
திருமதி.கே.ஏ. சுகந்ரா வல்பொல (அங்கத்தவர்)	-	சிரேஸ்ட உதவிச் செயலாளர், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு
திருமி.ஏ.பீ.ஆர். அமரக்கோன் (அவதானிப்பாளர்)	-	கணக்காய்வு அதிகாரசபை, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
திரு.கே.ஏ.நிஷாந்த (அங்கத்தவர்)	-	பிரதிப் பணிப்பாளர் - நிதி (அ.நி.) அ.மு.அ.
திரு.ஜே.எச.பீ.ஜயலத்	-	உள்ளக கணக்காய்வு, அ.மு.அ.

தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் நிலையத்தில் உள்ளக கணக்காய்வு பிரிவினால் வெளியிடப்பட்டிருந்த கணக்காய்வு மதிப்பீடுகளில் எழுப்பப்பட்டிருந்த அவதானிப்புகள் தொடர்பிலான விடயங்கள் இதன்போது பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்டன. இதற்கமைய நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134இல் காட்டப்பட்டுள்ள விடயங்கள், முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தில் குறிப்பிட்ட விடயங்களை கலந்தாலோசித்து திருத்துவதற்காக நடத்தும் மருத்துவ நிலையத்தின் முகாமைத்துவத்திற்கு தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் காது மதிப்பீடுகள் மற்றும் அறிக்கைகளில் குறிப்பிடப்படும் அவதானிப்புகள் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் விதப்புரைகளுக்காக நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் மற்றும் தரம் தொடர்பில் இதன்போது தொடர்ந்தும் விடயங்கள் ஆராயப்படும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2018ஆம் ஆண்டுக்கான 3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை முறையாகவும்

சரியாகவும் முன்னெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்கள் முகாமைத்துவத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனால் குறிப்பிட்ட வருடத்திற்கான நான்காவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தை நடாத்த முடியவில்லை .

இலங்கை வளங்களுக்கு முக்கியத்துவம் வழங்கியவாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பொறுப்பேற்கப்பட்ட கருத்திட்டங்கள், வேலைத்திட்டங்கள் மற்றும் விடயங்களின் முன்கூட்டி நிச்சயிக்கப்பட்ட இலக்குகளை அடையும் நோக்கில் வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பாவிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப் படுத்துதல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சகல துறைகளையும் மீளாய்வு செய்தல் மற்றும் குறிப்பிட்ட விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை செலவு செய்தல், அங்கீகரிக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் குறிப்பிட்ட நோக்குகள் உண்மையிலேயே அடைய பட்டுள்ளனவா என்பதையும் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் அல்லது வேலைத்திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட வாறு தொழிற்படுகின்றன என்பதை தீர்மானித்தல் ஆகியன கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளாகும். இதனை எதிர்வரும் வருடங்களில் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு குழு எதிர்பார்க்கின்றது.

3.6 தேசிய பாதுகாப்பு தினம்

2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆந் திகதி கொண்டாடப்பட்ட தேசிய பாதுகாப்பு தினத்தையொட்டி பல நிகழ்வுகள் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டன. அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் சர்வமத நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் வழங்கியவாறு பொதுமக்கள் இடர் முகாமைத்துவம் தொடர்பில் அறிவுறுத்தப்பட்டார்கள். சகல மாவட்டங்களுக்குமான நிகழ்வுகள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் ஊடாக முன்னெடுக்கப்பட்டன. தேசிய வேலைத்திட்டத்தின் காலி பாதயாத்திரையானது சுனாமி நினைவுத்தூபியின் அருகில் மேற்கொள்ளப்பட்டது.

3.7 அவசர நிலைமை பதிலிருத்தல் குழு

அத்தியாவசிய தேவைகளின் சிரேட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் அவசர நிலைமைகளின் போது பதிலிருக்கும் பங்காளி நிறுவனங்கள் அனர்த்த நிலைமைகளின் போது குறிப்பிட்ட நிறுவனங்களுடன் இணைந்து அவசர பதிலிருப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பங்காளி நிறுவனங்களை ஆற்றுப்படுத்துவதும் நேரடி குழுக்கள் அவசர நிலைமை பதிலிருத்தல் குழு குழு எனப்படும்.

3.8 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ***www.dmc.gov.lk*** இற்றைப் படுத்துதல் மற்றும் பராமரித்து நடவடிக்கைகள் தனித்தன்மை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் பொறுப்பாக அமைவதுடன் 2018ஆம் ஆண்டில் நிறுவனத்தினால் மீட்டுக்கொள்ள பல முக்கிய செயற்பாடுகள் திண்ணியத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், சகல அனர்த்தங்கள் பற்றிய அறிக்கை நாளாந்தம் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

3.9 டிஸ்வென்ரா (Desinventor) தரவுக் களஞ்சியம்

அனர்த்த அபாயங்களை தணித்து அவரது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஒரு அத்தியாவசிய காரணியாக அமைவதுடன், இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளை படிப்படியாக நீண்டகால பரந்த ஒரு எல்லைப் பரப்புக்குள் விரிவடைந்து

செல்லும் முறையில் திட்டமிட்டு முன்னெடுத்தல் வேண்டும். இதன்போது அனர்த்த அபாயங்களை தணித்தல் தொடர்பில் ஆய்ந்தறிந்தறிவதற்கு சரியான முறையில் இற்றைப்படுத்தப்பட்ட தரவுகள் இருப்பது கட்டாயமானது என்பதுடன் இந்த தேவைப்பாட்டினை புரிந்துகொண்ட தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவானது 2008ஆம் ஆண்டு முதல் டிஸ்இன்வென்ரா தரவு களஞ்சியத்தை முன்னெடுத்து வருகிறது. இந்த அனைத்துத் தரவுகளும் இணையத்துக்குள் பகிரங்கமாக காணப்படுவதுடன் தேவையான எவருக்கும் இந்தத் தரவுகளை இணையத்திலிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

அனர்த்தங்கள் பற்றிய கடந்த கால அனைத்து தரவுகளையும் உள்ளடக்கிய தரவு வங்கியானது **www.desinventra.lk** என்ன இணையத்துக்கு விடுக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு சம்பவம் தொடர்பில் மாவட்ட, பிரதேச செயலக பிரிவுகள் வாரியாக குறிப்பிட்ட சம்பவங்களின்போது உப்பிட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற உயிரிழப்புக்கள், பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சேதமடைந்துள்ள சொத்துக்கள் பற்றிய தரவுகள் புள்ளிவிபர ரீதியாக குறிப்பிட்ட முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் அவசர கருமமாற்ற பிரிவினால் வெளியிடப்படும் தரப்பு அறிக்கைகள் மேலும் சுகாதாரம், வனப்பாதுகாப்பு, நீர்ப்பாசனம் மற்றும் வாகன விபத்துக்கள் தொடர்பிலான பொலிஸ் அறிக்கைகளிலிருந்து பெறப்படும் தரவுகளும் இந்த தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தத் தரவு முறைமையானது சுயமாக இற்றைப்படுத்த படுவதுடன் புதிய தரவு மூலாதாரங்களை அடையாளம் கண்டவாறு மிகவும் துல்லியமான தரவும் முழுறைமையாக அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டு எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும்.

4. தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு

4.1 அறிமுகம்

2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் கீழ் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தாபிக்கப்பட்டுள்ளதுடன், அனர்த்த முகாமைத்துவ நிலையம், அனர்த்த முன்னாயத்தம், பயிற்சி, தணித்தல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் அவசர அனர்த்தங்களின்போதான பதிலிருப்பு என நான்கு பிரதான பிரிவுகளை கொண்டுள்ளது. குறிப்பிட்ட ஒவ்வொரு பிரிவுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் அந்தந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

செலவுத் தலைப்பு	கருத்திட்டம்	2018 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி (ரூ. மில்லியனில்)	நிதித் தேர்ச்சி (%)	பௌதீக தேர்ச்சி (%)
3-2509	அனர்த்த தணிப்பு கருத்திட்டம்	480	75.13	95
10-2509	அனர்த்த அபாய தணிப்பு செயன்முறையை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல்	15	87	87
7-2509	அனர்த்த அபாய மதிப்பீடு	50	45	45

அட்டவணை **4.1: 2018** வருடத்துக்காக ஒதுக்கிய நிதி மற்றும் 2018ஆம்ஆண்டின் நிதி மற்றும் பௌதீக தேர்ச்சி பற்றிய சுருக்கம்

பொதுத்துறை சரியானது பின்வருமாறு 2018 ஆம் ஆண்டுக்காக நிதி ஏற்பாடுகளை தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவுக்கு ஒதுக்கீடு செய்ததுடன் குறிப்பிட்ட வருடத்திலான வருடாந்த பௌதிக மற்றும் நிதித் தேர்ச்சி பின்வருமாறாகும்.

2018ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக தேர்ச்சி பற்றிய சுருக்கம்

இதற்கு மேலதிகமாக பின்வரும் வேலைத் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளும் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- **டிஸ்இன்வென்ரா (Desinventor) தரவு களஞ்சியத்தை இற்றைப்படுத்துதல்**

அனர்த்தங்கள் பற்றிய கடந்தகால அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய தரவு வங்கியானது **www.desinventra.lk** என இணையத்துக்கு விடுக்கப்பட்டுள்ளது. இந்த தரவு முறைமையானது சுயமாக இற்றைப்படுத்தப் படுவதுடன் புதிய தரவு மூலங்களை அடையாளம் கண்டவாறு மிகவும் துல்லியமான தரவு முறைமையாக முன்னெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

- **ரிக் ஸ்இன்வோ அபாயத் தகவல் இணையதளம் (riskinfo web potal)**

புவியியல் தரவுகள் **(Geospatial Data)** இதன்போது இந்த இணையத்தில் பதிவேற்றம் செய்தல் **(upload)** இங்கு இடம்பெறுகிறது. இந்த புவியில் தரவுகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களினால் பயன்படுத்தப்படுவதுடன் இதன் மூலம் அனர்த்தம் இடம்பெறக்கூடிய இடம்பெறுகின்ற பிரதேசங்கள் ஆய்வு செய்யப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு எதிர்கால திட்ட வடிவமைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் அனுத்தமா அமைப்பு நடவடிக்கைகளுக்காக அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் வரைபுகள் மற்றும் தரவுகளை கோரி 2018ஆம் ஆண்டில் 27 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அக்கோரிக்கையாளர்களுக்கான வரைபுகள் மற்றும் தரவுகள் பிரிவினால் வழங்கப்பட்டுள்ளன.

- **செய்மதியை பயன்படுத்தி அனர்த்ததுக்கு உட்பட்டுள்ள பிரதேசங்கள் மற்றும் தகவல்களை வெளிப்படுத்திக் கொள்ளுதல்**

2018 ஆம் ஆண்டில் மே மாதத்தில் இடம்பெற்ற அனர்த்தத்தின்போது ‘‘இன்டனக்‘னல் சாட்டர் **(International Charter)** நிறுவனமானது செயற்கை உடு புகைப்படங்களை விண்ணப்பித்து பெற்றுக் கொண்டதுடன், மே மற்றும் டிசம்பர் மாதங்களில்” சென்டூஅல் ஏசியா” **(Sentiual Asia)** நிறுவனமானது செயற்கை உடு புகைப்படங்களை விண்ணப்பித்து பெற்றுக் கொண்டுள்ளது.

- **மாவட்ட மட்டத்தில் பொதுமக்கள் முறைப்பாடு, கோரிக்கை, பிரேரணைகள் மற்றும் கருத்துக்களை வினவுவதற்கான பதிலிருப்பு**

அனர்த்த தணிப்புக்கு ஏற்புடையதாக பொதுமக்களினால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகள், கோரிக்கைகள், பிரேரணைகள், கருத்து வினவுதல் தொடர்பில் பதிலிருத்தலும் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன், முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு ஏற்ப அதற்கான பதிலிருப்பு தீர்மானிக்கப்படும். 2018ஆம் ஆண்டினுள் இத்தகைய

271 கடிதங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அந்த அனைத்து கடிதங்களுக்கும் பதில் வழங்கப்பட்டுள்ளது.

4.2 இப்பிரிவின் கடமைகள் மற்றும் விடயப்பொறுப்புகள்

- **தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் அனர்த்த அபாயங்களை தணிக்கும் முகமாக செயல் நுணுக்க திட்டங்களை தயார் செய்தலும் நடைமுறைப்படுத்துதலும்**

தேசிய மற்றும் மாவட்ட மட்டத்திலான அனர்த்த அபாயங்களை தணிப்பதற்கான செயல் நுணுக்க திட்டங்களை தயார் செய்து முன்வைத்தல். இதற்கமைய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அனர்த்த அபாயங்களை தணிப்பதற்காக கிடைக்கப்பெறும் நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தி தேசிய மட்டத்தில் குறிப்பிட்ட கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக மாவட்ட மட்டத்தில் உதவிப் பணிப்பாளர் ஊடாக ஒருங்கிணைப்பு மற்றும் அதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்.

தேசிய மட்டத்தில் அனைத்து அபாயங்களை தணிப்பதற்காக ஏனைய அமைச்சுக்கள், நிறுவனங்களில் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்கு தேவையான சந்தர்ப்பத்தில் பங்களிப்பு நல்கி அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் அதுபற்றிய தேர்ச்சி அறிக்கை முன்வைத்தல்.

- **அனைத்து அபாயங்களை தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்துக்குள் உள்ளீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்**

அனர்த்த அபாயத் தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்ப்பதற்காக அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பின் ஊடாக குறிப்பிட்ட துறைகளை அடையாளம் காணுதல் மற்றும் ஒவ்வொரு துறைக்கும் அனர்த்த அபாயங்களை தணிப்பதற்கான வழிகாட்டல்களை உருவாக்குவதன் மூலம் தேசிய மட்டத்திலான அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்ப்பதற்கான வழிகாட்டல்களை தயார் செய்தல் மற்றும் குறிப்பிட்ட வழிகாட்டல்களை நடைமுறை ரீதியாக செயற்படுத்துவதற்கான பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் காலநிலை மாற்றங்களுக்கு பழகிக் கொள்ளுதல், இசைவாக்கம் பெறுதல் மற்றும் தணிப்பதற்கான செயற்பாடுகளை ஏனைய நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளுதல்.

அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் இழப்புகள் மற்றும் தேசங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்தல். பங்காளி நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டு அனர்த்தங்களுக்கு பின்னரான புனரமைப்பு மற்றும் வழமை நிலைமைக்குக் கொண்டு வரும் வேலைத்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

- அனர்த்த இடர் முகாமைத்துவம் தொடர்பிலான ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- அனர்த்தம் தொடர்பிலான தரவு முறைமையையும் முன்னெடுத்தல் மற்றும் இற்றைப் படுத்துதல்
- அனர்த்த அபாய மாவட்டங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டு அனர்த்த அபாய மதிப்பீடு தொடர்பிலான விடயங்களை மீட்டுக்கொள்வதற்கான அனர்த்த முகாமைத்துவ வழிகாட்டல்களை வழங்குதல்.

4.3 பிரிவின் செயற்பாடுகள்

i. தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் அனர்த்த அபாயங்களை தணிப்பதற்கான உபாய வழி முறைத் திட்டங்களை தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்துதல்.

மாவட்ட மட்டத்தில் அனர்த்த அபாய தணிப்பு கருத்திட்டங்களை அமுல்படுத்துதல்

- எதிர்வரும் வருடத்திற்காக, மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஊடாக மாவட்ட மட்டத்தில் அனர்த்த தணிப்பு வேலைத்திட்டங்களை தெரிவு செய்தல் மற்றும் மாவட்ட மட்டத்தில் குறிப்பிட்ட விதப்புரைகள் சகிதம் (பணிப்பாளர் நாயகத்தின் ஆள் மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கருத்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலான வழிகாட்டல்களுக்கு அமைய) அடிப்படை கருத்திட்ட பிரேரணைகளை பெற்றுக் கொள்ளுதல்.
- எதிர்வரும் வருடத்துக்காக, மாவட்ட மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்திட்ட பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அடிப்படை தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளுதல், அது பற்றிய அறிக்கை தயார் செய்தல் மற்றும் மாவட்டங்களுக்கு மீள்வலுவூட்டலை சமர்ப்பித்தல்.
- தணிப்பு வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காக தணித்தல் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளுக்கு அமைய போதுமான அளவில் மாவட்டங்களிலிருந்து கருத்திட்ட பிரேரணைகளை பெற்றுக் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- எதிர்வரும் வருடத்துக்காக, மாவட்ட மட்டத்தில் கருத்திட்ட பிரேரணை சுருக்கங்களை இற்றைப்படுத்தல் மற்றும் கருத்திட்டங்களை தெரிவு செய்வதற்காக தேசிய மட்ட குழுக்களுக்கு முன் வைப்பதற்கு தேவையான பத்திரங்களை தயார் செய்தல்.
- தேசிய மட்டத்திலான கருத்திட்டங்களை தெரிவு செய்ததன் பின்னர் (பணிப்பாளர் நாயகத்தினால் மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான வழிகாட்டல்களுக்கு அமைய) தெரிவு செய்யப்பட்ட கருத்திட்ட அமுலாக்கல் களை மேற்பார்வை செய்தலும் அறிக்கையிடுதலும்.
- தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டங்களுக்கான மதிப்பீடுகள் மற்றும் ஏனைய பத்திரங்களின் உண்மைத்தன்மையை பரிசீலித்தல் மற்றும் அத்துடன் தொடர்புடைய பத்திரங்களின் இற்றைப்படுத்தலை மேற்பார்வை செய்தல்.
- தெரிவு செய்யப்பட்ட கரு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் முகம் கொடுக்க வேண்டி வரும் பிரயோக சிக்கல்களைத் தீர்ப்பதற்காக தலையீடு செய்தல் மற்றும் கருத்திட்டங்களின் தேர்ச்சியை விரைவு படுத்துவதற்குத் தேவையான தலையீடுகளை மேற்கொள்ளுதல்.
- கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் கருத்திட்டங்கள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டன என்பதற்கான அறிக்கைகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் நிதி அறிக்கையிடலை உரிய முறையில் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் நிதி அறிக்கையிடரவ உரிய முறையில் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- அனர்த்த தணிப்பு கருத்திட்டங்கள் தொடர்பிலான முன்னேற்றத்தை அறிக்கையிடுதல் (பௌதீக மற்றும் நிதி)

ii. <u>தேசிய மட்டத்தில் அனர்த்தங்களை தணிப்பதற்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் கீழ் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் மற்றும் கருத்துக்கள்</u>

- பல்வேறுபட்ட தொழில்நுட்ப நிபுணத்துவத்தை கொண்டுள்ள அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் ஊடாக அனர்த்த தணிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கையில் அதற்குத் தேவையான பங்களிப்பினை நல்குதல் மற்றும் தலையீடுகளை மேற்கொள்ளுதல்.
- அனர்த்த தணிப்பு வேலைத்திட்டங்களை அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் நிரல் அமைச்சுக்களின் ஊடாக மேற்கொள்வதற்கான ஒருங்கிணைப்பினை முன்னெடுத்தல்.
- ஏனைய அமைச்சுக்கள், நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற அனர்த்த அபாயத் தணிப்பு வேலைத்திட்டங்களை மேற்பார்வை செய்தலும் அறிக்கையிடுதலும்.

iii. அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்துக்குள் உள்ளீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்துக்குள் உள்ளீர்ப்பது தொடர்பிலான அரச மற்றும் தனியார் துறை பங்காளிகளை ஒருங்கிணைத்தல்.
- தொழில்நுட்ப செயற்பாட்டுக் குழுவின் தொழில்நுட்ப விதப்புரைகள் மூலம் திட்டங்களை தயார் செய்தல் மற்றும் முன்னெடுத்தல்.
- ஒவ்வொரு துறையிலும் அனர்த்த அபாய தணிப்பிற்கான வழிகாட்டல்களை தயார் செய்வதற்காக ஆலோசனை சேவைகளை பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்குதல்.
- வழிகாட்டல்களை தயார் செய்வதற்காக தெரிவுசெய்யப்படும் ஆலோசனை சேவையின் மூலம் குறிப்பிட்ட காலத்துக்குள் தரமான சேவையினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.
- வழிகாட்டல்களை தயார் செய்தல் மொழிப்பெயர்த்தல் மற்றும் அச்சிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- கூட்டங்கள், விழிப்புணர்வூட்டல்கள், செயலமர்வுகள் ஆகியவற்றை ஒழுங்கு செய்தல்
- அறிக்கையிடுதல்
- கருத்திட்டங்களை மேற்பார்வை செய்தல்
- வழிகாட்டல்களை நடைமுறை ரீதியாக செயற்படுத்துவதற்கான பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

iv. காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப இசைந்தொழுகுதல், மற்றும் தணிப்பதற்கான வேலைத்திட்டங்களை ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளுதல்.

- காலநிலை மாற்றங்களுக்கு இசைந்தொழுகுதல், தணித்தல் தொடர்பிலான கருத்திட்ட பிரேரணை தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப இசைந்தொழுகுதல் மற்றும் தணித்தல் தொடர்பிலான வேலைத்திட்டங்கள், பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகளை பிரதிநிதித்துவம் செய்தலும் குறிப்பிட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பிலான எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்.

- காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப இசைந்தொழுகுதல் மற்றும் தணித்தல் தொடர்பிலான அறிக்கைகளைத் தயார் செய்தல்.

v. அனர்த்தங்களின்போதான இழப்புகள் மற்றும் சேதங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்தல்

- அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் அனர்த்தங்களின் போதான இழப்புகள் மற்றும் தேசங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்தல்
- பங்காளி நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டு அனர்த்தத்துக்குப் பின்னரான புனரமைப்புஈ வழமை நிலைக்கு கொண்டு வரும் வேலைத்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

vi. அனர்த்த இடர் முகாமைத்துவம் தொடர்பிலான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

- அனர்த்தம் தொடர்பிலான தரவும் முறைமையின் முன்னெடுத்தல் மற்றும் இற்றைப்படுத்தல் மேற்பார்வை செய்தல்.
- அனர்த்த அபாய மாவட்டங்களுடன் ஒருங்கிணைப்புகளை மேற்கொண்டு அனர்த்த அபாய மதிப்பீடு தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அனர்த்த அபாய முகாமைத்துவ வழிகாட்டல்களை வழங்குதல்
- அனர்த்த அபாயம் தொடர்பிலான செயற்பாடுகளை திட்டமிடுதலும் முன்னெடுத்தலும்
- அனர்த்த அபாயத்துக்கு வழிவகுக்கும் காரணிகளை இனங்காணுதலும் மேற்பார்வை செய்தலும்.
- குறிப்பிட்ட நிறுவனங்கள் மற்றும் துறைகளுக்கு அனர்த்தம் பற்றிய தரவுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- தேவைகளுக்கேற்ப தகவல்களை அறிக்கையிடுதலும் வரைபடங்களை தயார் செய்தலும்.
- அறிக்கையிடுதல்.

4.4 துறைசார் பொது செயற்பாடுகள்

- தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் முன்வைக்கப்படும் அனர்த்த தணிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி விடயம் தொடர்பிலான கோரிக்கைகள் பிரேரணைகள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- கணக்காய்வு மதிப்பீடுகளுக்கு பதிலிருத்தல்
- அமைச்சினால் கோரப்படும் அறிக்கைகளைத் தயார் செய்தல்.
- அனர்த்த தணிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவினை பிரதிநித்துவப்படுத்தும் குழுக்கள், கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளில் பங்கேற்றல்,தகவல் வழங்குதல், அறிக்கைகளைத் தயார் செய்தல்.
- பிரிவின் ஒட்டுமொத்த முன்னேற்ற அறிக்கை தயார் செய்தல் (நிதி மற்றும் பௌதீக)
- பிரவின் ஒட்டுமொத்த வருடாந்த வேலைத்திட்டங்களை திட்டமிடுதல்
- ஆவணக் கோவைகளின் பராமரிப்பினை மேற்பார்வை செய்தல்.
- வளங்களை முகாமைத்துவம் செய்தல் (மனித, பௌதீக மற்றும் நிதி)

4.5 2018 ஆம் ஆண்டின் தேர்ச்சி


கடந்த வருடங்களில் இடம்பெற்ற அனர்த்தங்கள் மற்றும் எதிர்காலத்தில் உக்கிரமடையக்கூடிய அனர்த்தங்கள் பற்றி ஆய்வு செய்து தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவின் மூலம்

மாவட்ட மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்திட்ட பிரேரணைகளை அடிப்படையாகக் கொண்டு தணித்தல் கருத்திட்டங்களுக்கான செயலாற்றிய திட்டங்கள் தயார் செய்யப்படுகின்றன. மேலும் அனர்த்த முகாமைத்துவ விடயத்துடன் தொடர்புடைய ஆராய்ச்சி நடவடிக்கைகள், அனர்த்த தணிப்பு மதிப்பீடுகள் மற்றும் அபிவிருத்தியில் சுற்றோட்டத்தில் அனர்த்த அபாய தணிப்புகளை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கைகளும் குறிப்பிட்ட தொழில்நுட்ப குழுவினூடாக திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன.

பொதுத் திறைசேரியினால் பின்வருமாறு 2018ஆம் ஆண்டுக்கான நித்தி ஏற்பாடுகள், தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது

செலவுத் தலைப்பு	கருத்திட்டம்	2018ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாடு (மில்லியன் ரூபாயில்)
3-2509	அனர்த்த தணிப்பு கருத்திட்டம்	480
10-2509	அனர்த்த அபாயங்களை தணிக்கும் முறையியலை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்துக்குள் உள்ளீர்த்தல்	15
7-2509	அனர்த்த அபாய மதிப்பீடு	50
மொத்தம்		**545**

அட்டவணை **4.2: 2018** இல் தணித்தல் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள்



குறிப்பு **4.1: 2018** இற்கான நிதி ஒதுக்கீடு

2018 ஆம் ஆண்டுக்கான நிதி மற்றும் பௌதீக தேர்ச்சியின் சுருக்கம் பின்வருமாறாகும்.

செலவுத் தலைப்பு	கருத்திட்டம்	2018 நிதி முன்னேற்றம்	நிதி முன்னேற்றம் (%)	பௌதீக முன்னேற்றம் (%)
3-2509	அனர்த்த தணிப்பு கருத்திட்டம்	**480**	73.13	98

10-2509	அனர்த்த தணிப்பு முறையியலை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல்	**15**	87	**87**
7-2509	அனர்த்த அபாய தணிப்பு	**50**	**45**	**45**

அட்டவணை **4.3:** 2018 ஆம் ஆண்டுக்கான நிதி மற்றும் பௌதீக தேர்ச்சியின் சுருக்கம் பின்வருமாறாகும்.

4.6 அனர்த்த தணிப்பு கருத்திட்டங்களை முன்னெடுத்தல்

இலங்கையிலுள்ள அனர்த்த தணிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் பிரிவின் பிரதான பணியாக அமைவதுடன், ஒவ்வொரு வருடத்திலும் புது திறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி ஏற்பாடுகளையும் முகாமைத்துவம் செய்தவாறு அனைத்து கணிப்பு கருத்துடன் பிரேரணைகளின் முன்னுரிமைக்கு ஏற்ப கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன்போது பலதரப்பட்ட அனர்த்த தணிப்பு வேலைத்திட்டங்கள் அத்துடன் தொடர்புடைய நிரல் அமைச்சினூடாக குறிப்பிட்ட அமைச்சுக்கான நிதி ஏற்பாடுகளை கொண்டு மேற்கொள்வதற்காக ஆற்றுப்படுத்தப்படுவதுடன், முன்னுரை மைக்கை ஏற்ப ஏனைய அனர்த்த தணிப்பு பிரேரணைகளை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன்போது மாவட்ட மட்டத்திலிருந்து கோரப்படும் அனர்த்த தணிப்பு கருத்திட்ட பிரேரணைகளைக் கருத்தில் கொண்டு, தேசிய ம்டத்தில் அமைக்கப்படும் குழுவொன்றின் மூலம் அனர்த்த தணிப்பு கருத்திட்டங்கள் தெரிவு செய்யப்படுவதுடன், பின்னர் குறிப்பிட்ட கருத்திட்ட பிரேரணைகளுக்கான விபரமான மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் ஏதுவாகும் ஏனைய தொழிநுட்பரீதியான அறிக்கைகளையும் கருத்தில் கொண்டு மாவட்ட செயலாளர்களுக்கு நிதி விடுவிடுக்கும் செயற்பாடானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படும். கருத்திட்ட முன்னெடுப்புக்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி செயலாளரினால் நேரடியாக மேற்பார்வை செய்யப்படுவதுடன், தேசிய மட்டத்திலும் கருத்திட்ட முன்னேற்ற மேற்பார்வை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு கருத்திட்டத்துக்கும் தேவையான பல்வேறுபட்ட தொழிநுட்ப ஒத்துழைப்புக்கள் மாவட்ட ரீதியில் இதனுடன் தொடர்புடைய தொழிநுட்ப நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுவதுடன், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேவ செயலகங்கள் ஊடாக நிதிக் கையாளுகை மேற்கொள்ளப்படும். கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர், முறையான கள ஆய்வுக்கும் பின்னர், கருத்திட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதாக குறிப்பிட்ட தொழிநுட்ப விதப்புரைகள் சகிதம் மாவட்ட முகாமைத்துவ உதவி பணிப்பாளர் ஊடாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு அறிக்கையிடப்படும்.

அனர்த்தங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் மாவட்ட மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகளைக் கருத்தில் கொண்டு ஆற்றுப்படுத்துதப்பட்டுள்ள தணிப்பு கருத்திட்டங்களை மேற்கொள்வதற்காக ரூ.480 மில்லியன் பொதுத் திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

வருடம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதித்தொகை (மி.ரூ)
2011	**114**
2012	122
2013	274
2014	500
2015	**500**
2016	500
2017	480
2018	**480**

அட்டவணை **4.4: 2018**அனர்த்த தணிப்பு கருத்திட்டத்துக்காக வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு


மாவட்ட மட்டத்தில் 278 அனர்த்த தணிப்பு கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், 2018 டிசெம்பர் 31ஆந் திகதியில் 271கருத்திட்டங்கள் பௌதீகரீதியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், 07 கருத்திட்டங்கள் தற்கோதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2018 டிசெம்பர் 31ஆந் திகதியில் இக்கருத்திட்டங்களின் ஒட்டுமொத்த பௌதீகத் தேரச்சி **98 %** ஆகவும் நிதித் தேர்ச்சி **75.13%** ஆகவும் காணப்பட்டது.

அனர்த்தங்களுக்கு ஏற்ப இக்கருத்திட்டங்களின் வகைப்படுத்ததலானது பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதுடன், ஏஜன யஅனர்த்தங்களுக்கான தணிப்பு வேலைத்திட்டங்கள் அவற்றுக்கான நிரல் அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

அனர்த்தம்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	நிதி (ரூ)
வெள்ளம்	**213**	336,564,987.80
மண்சரிவு மண்படை சரியும் இடங்களை உறுதிப்படுத்துதல்	**41**	76,555,513.34
வறட்சி	**21**	39,465,391.74
சுனாமி	**03**	4,499,469.50
மொத்தம்	**278**	**457,085,362.30**

அட்டவணை **4.5:** ஒவ்வொரு அனர்த்தத்துக்கும் ஏற்ப கருத்திட்டங்களின் வகைப்படுத்தல்

- இதற்கு மேலதிகமாக 2017இல் கருத்திட்டங்களுக்கான ரூ. **22,137,935.91**கொடுப்பனவு 2018இல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



குறிப்பு **4.2:** அனர்த்தங்களுக்கு ஏற்ப கருத்திட்டங்கள் வகைப்படுத்தப்படுதல்

	கருத்திட்டம்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை	ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்த நிதி	நிதித் தேர்ச்சி (%)	பௌதீக தேர்ச்சி (%)
01	அம்பாறை	03	03	14,312,145.13	100	100
02	அநுராதபுரம்	93	93	105,222,290.27	48	100
03	பதுள்ளை	6	6	17,562,571.31	100	100
04	மட்டக்களப்பு	2	2	16,361,782.08	96	100
05	கொழும்பு	2	2	5,662,827.31	96	100
06	காலி	3	3	7,105,887.73	74	100
07	கம்பஹ	8	8	5,743,149.66	98	100
08	அம்பாந்தோட்டை	5	4	19,297,966.84	83	100
09	யாழ்ப்பாணம்	18	18	22,665,034.57	81	100
10	களுத்துறை	8	8	18,034,878.60	30	100
11	கண்டி	16	16	27,886,900.13	94	100
12	கேகாலை	15	15	21,892,474.07	97	100
13	கிளிநொச்சி	11	11	9,722,073.85	100	100
14	குருநாகல்	3	3	5,445,227.44	0	100
15	மன்னார்	4	4	10,350,194.05	69	100
16	மாத்தளை	7	7	15,978,686.28	94	100
17	மாத்தறை	3	2	2,939,178.62	80	100
18	மொணறாகலை	3	3	9,931,307.00	80	100
19	முல்லைத்தீவு	3	3	6,830,000.00	19	100
20	நுவரெலியா	6	2	9,468,191.77	74	70
21	பொலன்னறுவை	7	6	25,379,981.78	57	90
22	புத்தளம்	18	18	26,726,069.44	80	100
23	இரத்தினபுரி	21	21	16,322,831.52	98	100
24	திருகோணமலை	5	5	15,780,400.00	99	100
25	வவுனியா	7	7	19,667,687.96	94	100
வெள்ள அவசர பதிலிருப்பு கருத்திட்டத்துக்காக வவுனியா,பொலன்னறுவை மற்றும் புத்தளம் மாவட்டங்களுக்கு நிதி வழங்கல்				795,625.00		
மொத்தம்		278	271	457,085,362.30	**75.13**	98

அட்டவணை **4.6: மாவட்ட வாரியாக திட்ட முன்னேற்றம்**

முன்னெடுக்கப்பபட்டுள்ள கருத்திட்டங்களின் புகைப்படங்கள்





வெள்ளத்தை தணிப்பதற்காக பொலன்னறுவை மாவட்டத்தில் கல்தம்பரா கிராமத்தில் நீர் வடிகாலமைப்பு முறைமையை தயார் செய்தல்




வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்கான பொலன்னறுவை மாவட்டத்தில் பிரதேச செயலகப் பிரிவு **25-26** இனை இணைக்கும் கணுஅல வடிகாலமைப்பை அமைத்தல்




மண்வரிவு அபாயத்தை தணிப்பதற்காக கண்டி மாவட்டத்தில் நாவப்பிட்டிய கதிரேசன் பாடசாலையில் பாதுகாப்பு மதிலணையை அமைத்தல்




வெள்ள அபாயத்தை தணிப்பதற்காக கம்பஹ மாவட்டத்தில் கால்வாய் முறைமையை சுப்பாவ செய்கல்

4.7 அனர்த்த அபாய முகாமைத்துவத்தை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல்

அனர்த்த முகாமைத்துவ விடயமானது ஒரு கூடுடிணைந்த செயற்பாடாக காணப்படுஅதல் வேண்டுமென்பதுடன், இதற்காக அனைத்து துறைகளினதும் பங்களிப்பு காணப்படுவது மிக முக்கியமானதாகும். இயற்கையாகவும் மனிதர்களின் செயற்பாடுகள் காரணமாகவும் ஏற்படும் அனர்த்தங்கள் நாட்டின் எந்தவொரு இடத்திலும் இடம்பெறுவதற்கான அபாயம் காணப்படுவதனால், நீர், தலை மற்றும் ஆகாயம் ஆகிய அனைத்து ஊடகங்களிலுமான செயற்பாடுகளுடன் அனர்த் தணிப்பு செய்பாடுகள் பிணைந்து காணப்படுதல் வேண்டும். பிரயோகரீதியாக ஆராய்ந்து பார்த்து நேரடியாக அனர்த் முகாமைத்துவத்துக்கான பங்களிப்பினை பெற்றுக்கொள்ள வேண்டிய 10 துறைகள் அடையாளம் காணப்பட்டு குறிப்பிட்ட 4 துறைகளில் அனர்த் அபாய

முகாமைத்துவத்தினை அபிவிருத்தின் பிரதான சுற்றோட்டத்தினுள் உள்ளீர்ப்பதற்கான கருத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இதன்போது இக்கருத்திட்டமானது அரசம ற்றும் தனியார் ஆகிய இரண்டு சுற்றோட்டங்களையும் இணைத்தவாறு முன்னெடுக்கப்படுவதுடன், இத்துறைகளில் பரந்த மட்டத்தில் அனர்த்த அபாய தணிப்பு பற்றி கருத்தில் கொள்வதன் மூலம் அபிவிருத்தி சுற்றோட்டத்தில் அபாய தணிப்பிணை உள்ளீர்த்தல் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் அனர்த்தங்கள் இடம்பெறுவதன் போக்கினை மிகவும் விரைவாக குறைத்துக்கொள்ள முடியுமென்பதுடன், மானுட, பௌதீக மற்றும் நிதி வளங்களைப் பாதுகாத்தவாறு நிலையான அபிவிருத்தியை நோக்கி நாட்டை முன்னெடுப்பதில் பங்களிப்பு நல்க முடியும்.

அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்க்கும் கருத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக தொழிநுட்ப கருமமாற்றல் குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன், பல்வேறுபட்ட துறைகளைச் சேரந்த நிபுணர்கள் இந்த தொழிநுட்ப குழுவினை பிரதிநிதித்துவம் செய்கிறார்கள். இக்குழுவானது கருத்திட்டத்துக்கான எதிர்கால செயற்பாடுகளை திட்டமிடுதல் மற்றும் மேற்பார்வை செய்யும் பணிகளை மேற்கொள்கின்றது.

2018இல் தொழிநுட்ப கருமமாற்றல் குழுவானது 02 கூட்ட அமர்வுகளை நடாத்தியுள்ளதுடன், குறிப்பிட்ட கூட்டங்களின்போது அனர்த்த அபாய முகாமைத்துவத்தை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்ப்பதற்காக தனியார் துறையின் பங்களிப்பை பெறுதல், அனர்த்த அபாய முகாமைத்துவத்துக்காக ஒவ்வொரு துறைசார்ந்தாகவும் வழிகாட்டல்களை தயார் செய்தல் மற்றும் அதற்கான ஆலுர்சனை சேவையினை வழங்கல், தேசிய மட்டத்திலான செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல் ஆகியவை தொடர்பில் ஆழமாக பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பின்வரும் திகதிகளில் தொழிநுட்ப கருமமாற்றல் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

01. **2018/ 07/ 19**
02. **2018/ 09/ 27**

தொழிநுட்ப கருமமாற்றல் குழுவின் விதப்புரைகளையும் கருத்தில் கொண்டு **2018/ 09/ 06 දින** அனர்த்த அபாய முகாமைத்துவத்தை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்ப்தற்காக தனியார் துறையின் பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்காக தேசிய மட்டத்திலான செயலமர்வு இடம்பெற்றுள்ளது. இந்த செயலமர்வானது பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டதுடன், இதற்காக தனியார் துறையினை பிரதிநிதித்துவப்படுத்தியவாறு பல்இன மற்றும் தேசிய மட்டத்திலான இயக்கங்களின் உயர் மட்ட முகாமைத்துவத்திலான 52 உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர். இதன்போது அனர்த்த அபாயங்கள் எவ்வளவு தூரம் தனியால் துறையில் தாக்கம் செலுத்துகின்றன என்பதும் தனியார் துறை செயற்பாடுகள் எவ்வளவு தூரம் அனர்த அபாயங்கள் மீது தாக்கம் செலுத்துகின்றன. என்பது குறித்து அறிவார்ந்த ஒரு கருத்தாடல் மேற்கொள்ளப்பட்டதுடன், அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்ப்பதற்காக தனியார் துறையின் செயற்பாடுகள் தொடர்பில் உடன்பாடுகளை எட்டியவாறு செயலமர்வு முன்னெடுக்கப்பட்டது.

தொழிநுட்ப கருமமாற்றல் குழுவின் பேச்சுவார்த்தைகள் மற்றும் முந்திய வருடங்களில் தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் வாயிலாக அனர்த்த அபாய

முகாமைத்துவத்தை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்ப்பதற்காக முக்கியமாக பின்வரும் துறைகள் அறிமுகம் செய்யப்பட்டன.

1. தேசிய திட்டமிடல்
2. நகர அபிவிருத்தி
3. தேசிய மற்றும் மாகாண வீதி நிர்மாணிப்பபு மற்றும் அபிவிருத்தி
4. உள்ளூராட்சி
5. சுற்றுலா
6. தனியார் துறை
7. சுகாதாரம்
8. நீர் மற்றும் துப்பரவேற்பாடு
9. சூழல் தாக்க ஆய்வு
10. உள்நாட்டு அனர்த்த முகாமைத்துவ செயல்நுணுக்கம்

இதன் விளைவான தற்போது தகுந்த ஆலோசனை சேவை நிறுவனமொன்று அடையாளம் காணப்பட்டு, ஆலோசனை சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பிட்ட வழிகாட்டல்களை தயார் செய்வது தொடர்பில் ஆலோசனை சேவை நிறுவனத்துடன், ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது சுகாதார துஜறசார்ந்த ஏராளமான வழிகாட்டல்கள் சுகாதார அமைச்சினால் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், இந்த வழிகாட்டல்களை சிங்களம் மற்றும் தழில் மொழிகளில் மொழிபெயர்த்து அச்சிடும் பணிகள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் அனைத்து மாவட்டங்களிலும் பணியாற்றும் முகாமைத்துவ உதவியாளரொருவர் மற்றும் தேசிய நிலையத்தில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கான MS-Office பற்றிய இருநாள் கணினி பயிற்சி NIBM நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் தரவுக் களஞ்சியத்தை தயார் செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல் உள்ளிட்ட MS-Office பற்றிய முறையான பயிற்சி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்களில் கணினித் தொழிநுட்பத்தை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை பயனுறதி மிக்கதாக செயற்படுத்துவதற்காக மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்துதல் எதிர்பார்க்கப்பட்டது.

செந்தாயர் வேலைத்திட்ட சட்டகத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய அவிருத்தி நோக்கங்களையும் எட்டியவாறு, அனர்த்த அபாய தணிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் தேசிய மட்டத்திலான பங்களிப்பு குறித்து அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட செயலமர்வானது 2018 டிசெம்பர் 17ஆந் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது. தனியார் மற்றும் அரச தர்பினரது பாரிய பங்களிப்புடன் அனர்த்த அபாய முகாமைத்துவத்தை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல் பற்றிய தேசிய மட்டத்திலான செயலமர்வொன்று ஒழுங்கமைக்கப்பட்டு வருவதுடன், இச்செயலமர்வானது 2019ஆம் ஆண்டில் நடாத்தப்படவுள்ளது.



2018/ 09/ 06 ஆந் திகதி தனியார் துறைக்காக பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்ட செயலமர்வு

4.8 அனர்த்த முகாமைத்துவ மதிப்பீடு

நாட்டினுள் இடம்பெற்றுள்ள அனர்த்தங்கள், வானிலை மற்றும் காலநிலை சார்ந்த நடப்புக் கோலங்கள், முரண்பாடுகள், சமூகப் பொருளாதார மற்றும் பௌதீக பின்னணி போன்ற பல்வேறுபட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அனர்த்த அபாய நிலைமைகள் தொடர்பிலான எதிர்வுகூறல்களை விஞ்ஞான ரீதியாக மேற்கொள்வதற்கான இயலுமை காணப்படுவதுடன் இதற்காக பல்வேறுபட்ட தொழில்நுட்ப நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகள் , அறிக்கைகள் ஆகியன உதவுகின்றன. மேலும், அனர்த்த அபாய மதிப்பீடு தொடர்பான தகவல்கள் மூலம் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலான வேறுபட்ட தீர்மானங்களுக்கு வருதல் மற்றும் வேலைத்திட்டங்களை திட்டமிடுவதும் இலகுவானதாகக் காணப்படுகின்றது

மேற் குறிப்பிடப்பட்ட விடயங்களை அடையும் முகமாக, அனர்த்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு மாவட்ட மட்டத்தில் அனர்த்த அபாய வழிமுறைகளைத் தயார் செய்தல் இந்த துறையினால் மேற்கொள்ளப்படும் மற்றுமொரு கருத்திட்டமாகும்.

உலகளாவிய தகவல் முறைமை பற்றிய (GIS) ஐந்து நாள் வேலைத்திட்டமொன்று 2018.03.26ஆந் திகதி முதல் 2018.03.30ஆந் திகதி வரையில் பேராதெனிய பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானவியல் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் நடாத்தப்பட்டது. இதில் 40 பேர் பங்கேற்றதுடன், வெள்ள அனர்த்தம் தொடர்பிலான வரைபடமாக்கல், மழை வீழ்ச்சி பற்றிய தரவு பகுப்பாய்வு, அனர்த்த அபாய மதிப்பீடு. அனர்த்தங்களினால் பாதிக்கப்படுவதற்கான இயலுமையை மதிப்பீடு செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் நவீன தொழில்நுட்ப கருவிகளை பயன்படுத்துதல் தொடர்பிலான சிறந்த தரப்பிலான வைச்சு வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் கள், உதவி பணிப்பாளர்கள், மாவட்ட உதவிப் பணிப்பாளர் கள், இத்துறை தொடர்பிலான அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஏனைய உத்தியோகத்தர்கள், தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு மற்றும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின்

உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பணியாட் குழுவினர் இப்பயிற்சி நடவடிக்கையில் பங்கேற்றனர். இந்த பயிற்சி வேலைத்திட்டமானது பேராதெனிய பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானவியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் பேராசிரியர்கள், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர், சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்தின் (IWMI) பிரதிநிதிகள், ஆசிய இந்த முன்னாயத்த நிலைய பிரதிநிதிகள் **(UN-SPIDER/ UNOOSA-UNSPIDER)** மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய புலமையாளர்கள் குழுவினால் வழி நடாத்தப்பட்டது.

உலகளாவிய தகவல் முறைமை **(GIS)** பற்றிய அறிவினைப் பயன்படுத்தி அனர்த்த அபாய வழிமுறைகளை தயார் செய்தல். அனர்த்த முன்னிரவு கூறலுக்கான தரவுகளை பகுப்பாய்வு செய்தல், அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலான பல்வகைப்பட்ட துறைகளிலான பணிகளுக்கு உதவும் புவியியல் தரவுகளை தயார் செய்தல் மற்றும் பயன்பாடு நடவடிக்கைகள் தொடர்பில் மனித வள அபிவிருத்தியை ஏற்படுத்துதல் இந்த பயிற்சியின் நோக்கமாக அமைந்தது.

2018 ஓகஸ்ட் மாதம் 20 மற்றும் 21ஆந் பகுதிகளில் கண்டி பொல்கொல்ல கூட்டுறவு பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்ட மாவட்ட அனர்த்த வழிமுறைத் தயாரிப்புக்கான வேலை திட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தேசிய நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட உதவி ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட 42பேர் பங்கேற்றனர். மாவட்ட மட்டத்தில் அனர்த்த வழிமுறைகளை தயார் செய்வதற்கான முறையிலே வடிவமைப்பதற்காகவும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதாகவுமான உடன்பாடுகளை எட்டுவது இந்த வேலைத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாக அமைந்தது.

எட்டப்பட்ட உடன்பாட்டுக்கு அமைய மாவட்ட மட்டத்தில் அனர்த்த அபாயங்களை மதிப்பீடு செய்வதற்காக தரவுகளை ஒன்று திரட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இதற்காக மாவட்ட மட்டத்தில் தரவுகளை ஒன்று திரட்டுதல் மற்றும் தரவுகளை கண்ணியப்படுத்துவதற்காக தற்காலிக அடிப்படையில் பயிற்சியாளர்கள் ஆட் சேர்க்கப்பட்டார்கள். மாவட்ட மட்டத்தில் பயிற்சியாளர்களை விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து பிரதேச செயலகங்கள் ஊடாக கிராமிய உயோகத்தர் பிரிவு வாரியாக தரவுகள் ஒன்று திரட்டப்பட்டதுடன் இதற்காக வள வழிமுறை போன்ற இருவழி தரவு மூலாதாரங்களும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டன. தரவுகளை ஒன்று கட்டுவதற்காக அல்ல பணிகளில் ஈடுபட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கைகளுக்காக தேசிய மட்டத்திலும் தற்காலிக அடிப்படையில் பயிற்சியாளர்கள் ஆட் சேர்க்கப்பட்டதுடன் மாவட்டத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி மாவட்ட அபாய வழிமுறைகளை அமைத்தலினை தேசிய நிலையம் மேற்கொள்கின்றது.

4.9 டிஸ்இன்வென்ரா (Desinventra) தரவுக்களஞ்சியம்

அனர்த்த அபாயங்களை தணித்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்வது ஒரு அத்தியாவசிய விடயமாக காணப்படுவதுடன் இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளை படிப்படியாக நீண்டகால ரீதியில் பரந்தரொரு பரப்புக்குள் திட்டமிட்ட முறையில் நடைமுறைப்படுத்துதல் வேண்டும், இதன்போது அனர்த்த அபாய தணிப்பு பற்றிய ஆய்வில் அடிப்படையாகக் கொள்வதற்கான சரியான இற்றைப்படுத்தப்பட்ட தரவு முறைமையொன்று காணப்படுதல் கட்டாயமானதாக அமைவதுடன் இத் தேவைப் பாட்டினை அடையாளம் கண்டுகொண் தணிப்புகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவானது 2008ஆம் ஆண்டு முதல் டிஸ்வென்ரா தரவு முறைமையையும் முன்னெடுத்து வருவதுடன் ரிக்ஸ்இன்வோ இணையப் பக்கமும் இற்றைப்படுத்த

படுகிறது. இந்த அனைத்துத் தரவுகளும் இணையத்தில் பகிரங்கமாக காணப்படுவதுடன் இத்தரவுகளை தேவையானவர்களுக்கு இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளும் காணப்படுகின்றன.

அனர்த்தம் பற்றிய கடந்த கால அனைத்து தரவுகளையும் உள்ளடக்கிய தரவு வங்கியானது www.desinventra.lk என இணையத்துக்கு விடுக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு சம்பவம் தொடர்பிலும் மாவட்ட, பிரதேச செயலகப் பிரிவுக்கு ஏற்ப குறிப்பிட்ட அனர்த்தத்தின் போது குறிப்பிட்ட காலப்பகுதியில் சம்பவித்த மரணங்கள், பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சேதமடைந்துள்ள சொத்துக்கள் பற்றிய விபரங்கள் புள்ளிவிபர ரீதியில் இந்த தரப்பு முறைமையினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அனர்த்த முகாமைத்துவ நிலையமானது அவசர கருமமாற்ற பிரிவினால் வழங்கப்படுகின்றன தரவு அறிக்கைகளிலிருந்தும் சுகாதாரம், வனப்பாதுகாப்பு. நீர்ப்பாசனம் மற்றும் வாகன விபத்துக்கள் பற்றிய பொலிஸ் அறிக்கைகள் போன்ற (www.police.lk) துறை கடந்து பெற்றுக்கொள்ளும் தரவுகளையும் இந்த தரவு முறையினுள் உட்புகுத்தியுள்ளது. இந்த தரவு முறைமையானது முனைப்பாக இற்றைப்படுத்த படுவதுடன் புதிய தரவுகள் மூலாதாரங்களை அடையாளம் கண்டவாறு மிகவும் சரியான தரவு முறைமையொன்றை உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

4.10 ரிக்ஸ்இன்வோ அபாயத் தகவல் இணையதளம் (riskinfo web potal)

புவியியல் சார்ந்த தரவுகள் **(Geospatial Data)** இந்த இணையத்தில் **(upload)** உள்ளடக்கப்படும். இவை உள்நாட்டு வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களினால் பயன்படுத்தப்படுவதுடன் இதன் மூலம் அரத்தம் இடம்பெறுகின்ற, இடம்பெறக்கூடிய பிரதேசங்கள் தொடர்பில் ஆய்வு செய்யப்படுதல், தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுதல் மற்றும் எதிர்கால திட்டங்களை தயார் செய்யும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரு கட்டணமும் இன்றி இணையத்திலிருந்து இந்த தரவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் இதன் மூலம் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கான ஒத்துழைப்பு வழங்கள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான ஊக்கமளித்து மேற்கொள்ளப்படுகின்றது. பல்கலைக்கழக மாணவர்களுக்கு தேவையான பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதனையும் தணிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவானது மேற்கொள்வதுடன் இதன் மூலம் அனர்த்த முகாமைத்துவ துறை சார்ந்த வகையில் புதிய மனித வளம் உருவாகுதல் ஒரு துணையை விளைவாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வரைபடங்கள் மற்றும் தரவுகளை கோரிய 27 சந்தர்ப்பங்கள் 2018ஆம் ஆண்டில் பதியப்பட்டுள்ளது டன் இந்த விண்ணப்பதாரர்களுக்கான வரைபடங்கள் மற்றும் தரவுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

4.11 செய்மதிப் புகைப்படங்களை பயன்படுத்தி அனர்த்தத்க்கு உட்பட்டுள்ள பிரதேசங்கள் மற்றும் தரவுகளை வெளிப்படுத்துதல்

அனர்த்த முன்னாயத்த மற்றும் திடீர் அனர்த்தங்களுக்கு பதிலிருக்கும் முகமாக அனர்த்தங்கள் நிகழக்கூடிய மற்றும் அனர்த்தங்கள் இடம் பெற்றுள்ள பிரதேசங்கள் மற்றும் அனர்த்தத்துக்கு உட்பட்டுள்ள மக்கள் பற்றிய தரவுகள் முக்கியமானதாக அமைகின்றன. இக் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி தகவல்களை வெளிப்படுத்தும் நடவடிக்கைகள், தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன,

இதன்போது வானிலை தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அனர்த்தம் நிகழ்வதற்கு முன்னரும் அனர்த்தத்திற்கு பிறகும் செயற்கை உடு புகைப்படங்கள் பெற்றுக் கொள்ளப் பட்டு அவை பகுப்பாய்வு செய்யப்பட்டு இரட்டை தரவுகளை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட தரவுகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

சர்வதேச செய்மதி தொழில்நுட்ப நிறுவனத்தினால் இப்புகைப்படங்கள் பெற்றுக்கொள்ள படுவதோடு, இதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு விசேட சந்தர்ப்பமொன்று **(International Charter)** மற்றும் **(Sentiual Asia)** எனும் நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ளதுடன். ஒரு அனர்த்தத்துக்கு முன்னதாக உரிய செயன்முறையின் ஊடாகஇந்த நிறுவனத்திற்கு அறிவித்தததன் பிற்பாடு குறிப்பிட்ட அனர்த்த அபாய பிரதேசங்களை உள்ளடக்கிய வாறு செயற்கை உடு புகைப்படங்கள் பெற்றுக்கொள்ளப் படுவதுடன், அனர்த்தத்திற்கு முன்னரான மற்றும் பின்னரான புகைப்படங்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு வழங்கி வைக்கப்படும். தொழில்நுட்ப கருவிகளை பயன்படுத்தி இப்புகைப்படங்கள் பின்னர் பகுப்பாய்வு செய்யப்படும்.


2018 மே மாதத்தில் இடம்பெற்ற அனர்த்தத்தின் போது **(International Charter)** நிறுவனமானது செய்மதிப் புகைப்படங்களை விண்ணப்பித்து பெற்றுக் கொண்டதுடன் மே மற்றும் டிசம்பர் மாதங்களில் **(Sentiual Asia)** நிறுவனம் செயற்கை உடு புகைப்படங்களுக்கு விண்ணப்பித்து பெற்றுக்கொண்டுள்ளது. அனர்த்த அபாயம் உக்கிரமடைந்த சந்தர்ப்பத்தில் **(International Charter)** நிறுவனம் உடு புகைப்படங்களை விண்ணப்பித்து பெற்றுக் கொண்டுள்ளதுடன் அழகு அபாயம் அவ்வளவு உக்கிரம் அடையாத போதிலும், அனர்த்தம் எதிர்பார்க்கப்படும் நிலையில **(Sentiual Asia)** நிறுவனம் செய்மதி புகைப்படங்களை கோருகிறது.

4.12 மாவட்ட மட்டத்தில் பொதுமக்களின் முறைப்பாடு, கோரிக்கைகள், பிரேரணைகள், வினாவுதல்களுக்கு பதின் நல்குதல்

அனர்த்த தணிப்புக்கு ஏற்புடையதாக பொதுமக்களினால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்ற முறைப்பாடுகள், கோரிக்கைகள், பிரேரணைகள் மற்றும் வினாவுதல்களுக்கு பதிலிருத்தலும் இப்பிரிவினர் மேற்கொள்ளப்படுவதுடன் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு அமைவாக பதிலிருத்தல் தீர்மானிக்கப்படும். இதன்போது கடிதங்களுக்கான தீர்வுகளை வழங்கக்கூடிய இயலுமை தொடர்பில் கவனம் செலுத்தி, காணப்படுகின்ற சட்ட திட்டங்கள் மற்றும் கொள்ளளவுக்கு அமைய தொழில்நுட்ப விதிமுறைகளையும் கருத்தில் கொண்டு பொது மக்களுடைய அபிலாசைகளை நிறைவேற்றுவதில் தணிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு ஈடுபட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் விடயப் பரப்புக்குள் உள்வாங்கப்படும் விண்ணங்களுக்கு தேசிய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் அனர்த்த முகாமைத்துவ அலகுகள் ஊடாக தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட ஆய்வு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் உரிய செயல் முறைகளுக்கு அமைவாக தீர்மானங்கள் எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதன்போது ஒவ்வொரு விடயம் தொடர்பிலும் அதற்கான தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் நிரல் அமைச்சுக்கு குறிப்பிட்ட விண்ணப்பங்கள் முன் வைக்கப்படுவதுடன் அனைத்து கடிதக் கொடுக்கல் வாங்கல்களின் போதும் விண்ணப்பதாரருக்கு பிரியொன்று வழங்கப்பட்டு அவர் அறிவுறுத்தப்படுகிறார்.

முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து கடிதங்களுக்கும் எழுத்து மூலமாக பதில் வழங்கப்படுவதுடன் நேரடியாக மேற்கொள்ளக்கூடிய வழிகாட்டல்கள் மற்றும் தொழிநுட்ப அறிவுறுத்தல்கள் ஆகியவை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் விண்ணப்பதாரருக்கு வழங்கப்படுகின்றன.



குறிப்பு **4.3:** மாவட்டத்துக்கு ஏற்ப ஆவணக்கோவைகள் ஆற்றுப்படுத்தப்பட்டுள் விதம்

மாவட்டரீதியியல் முன்வைக்கப்பட்டுள்ள கடிதங்கள் பறங்றிய சுருக்கம்

தொடர் இலக்கம்	மாவட்டம்	கோரப்பட்டுள்ள கடிதங்களின் எண்ணிக்கை												
		மாதம்												
		1	2	3	4	5	6	7	8	9	10	11	12	மொத்தம்
1	மாத்தறை	2		4	1	2	2	1	1	2				15
2	களுத்துறை		1		2	1	1		4			1	1	11
3	கம்பஹ	3					2	5	2	1	1	1	1	16
4	அம்பாறை						4	1	1	1	2			9
5	புத்தளம்		1	1	1			1	2	3	1			10
6	அம்பாந்தோட்டை		1					1	1	2	1			6
7	குருநாகல்						1	1	2	2	1			7
8	நுவரெலியா	1	2	2		1	2	2	2	1	2	1	1	17
9	மொணராகலை			1									2	3
10	மாத்தளை	2	1		2		2		2		6	1		16
11	வவுனியா					2								2
12	திருகோணமலை				1	1								2
13	பொலன்னறுவை	1	1			1			1					4
14	கேகாலை	2	3	3	1	2		3	2	4	5	2	2	29
15	இரத்தினபுரி	1	1			2	3	2	5		2	2	2	20
16	கண்டி	1	1		1	2	4	6	2	5	4	2	2	30

17	காலி	1				1	1	2		1		1		7
18	கொழும்பு	4	1		1	2	3	3	4	5	4	8	3	38
19	பதுள்ளை						1	4	2	1		3		11
20	அநுராதபுரம்	2		1				2	3	3	4	1		16
21	யாழ்ப்பாணம்								1					1
22	கிளிநொச்சி													0
23	மன்னார்													0
24	முல்லைத்தீவு													0
25	மட்டக்களப்பு	1												1
மொத்தம்		**21**	**13**	**12**	**10**	**17**	**26**	**34**	**37**	**31**	**33**	**23**	**14**	**271**

அட்டவணை **4.7:** மாவட்ட ரீதியில் முன்வைக்கப்பட்டுள்ள கடிதங்கள் பற்றிய சுருக்கம்

4.13 சவால்கள்

அனர்த்த முகாமைத்துவ விடயப் பரபரப்பானது மிகவும் பரந்து பட்டதாக அமைந்திருத்தல் மற்றும் அடுத்த எதிர்வுகூறும் இளமையை விஞ்சிய வண்ணம் துரித கதியில் பல்வேறுபட்ட அனர்த்தங்கள் நிகழக்கூடிய நிகழ்தகவு காணப்படுவதனால் துறையினுள் நடவடிக்கைகளை மேற்கொள்கையில் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளது.

தொழில்நுட்ப ரீதியில் வெற்றி காண முடியாத இயற்கை ரீதியான சவால்களுடன் மோதுகையில் எதிர்பார்க்கப்பட்டது குழந்தை பெற்றுக்கொள்ள முடியாது நிலமைகள் கடந்த காலப்பகுதியில் ஏற்பட்டதே போலவே எதிர்காலத்திலும் ஏற்படுமென எதிர் பார்க்க வேண்டி உள்ளது. தணிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவினால் வேலைத்திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்தும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு கையில் இவ்வாறே பல்வேறுபட்ட சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது.

- அனர்த்த தணிப்பு வேலைத்திட்டங்களை திட்டமிடுகையில், பல்வேறுபட்ட துறைசார்ந்த வேலைத்திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் அடையாளம் காணப்படுவதுடன் குறிப்பிட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முனைகையிலும் நடைமுறைப்படுத்துகையிலும் ஏற்படுகின்ற குறிப்பிட்ட சில பொதுமக்கள் எதிர்ப்பு காரணமாக எதிர்பார்க்கப்படும் தேர்ச்சியை அடைவதில் சிரமங்கள் ஏற்படுகிறன்றன.
- நாட்டில் காணப்படும் சாதாரண வருடாந்த வானிலை மற்றும் காலநிலை நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு அனர்த்த தணிப்பு கருத்திட்டங்களை முன்னெடுக்கையில் கால வரையறை தயார் செய்யப்பட்ட போதிலும், இக்கருத்திட்டங்கள் அனர்த்த அபாய பிரதேசங்களை அண்டியதாக மேற்கொள்ளப்படுவதனால் ஏற்படுகின்ற எதிர்பாரா வானிலை நிலைமைகள் காரணமாக முன்னெடுத்ததில் சிரமங்கள் ஏற்படுகின்றன.
- பல்வேறுபட்ட துறைகளில் தணிப்பு கருத்திட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்துகையில் அதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவியை அக்குறிப்பிட்ட தொழில்நுட்ப நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்வதில் ஏற்படுகின்ற தாமதங்கள் காரணமாக அனர்த்த தணிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுக்ககையில் குறிப்பிட்ட தாக்கங்கள் ஏற்படுகின்றன.
- அனர்த்த பரபரப்பானது பரந்ததாக காணப்படுவதனால் குறிப்பிட்ட சில தணிப்பு வேலைத்திட்டங்களை இனம் கண்டு அதுபற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்கையில்

இத்துடன் தொடர்புடைய பல்வேறுபட்ட புத்துணர்வுடன் நடவடிக்கைகளை மேற்கொள்கையில் கருத்திட்ட திட்டத்தினுள் பார்க்கப்பட்ட காலவரையறை விஞ்சப்படுகிறது.

- இனங்காணப்பட்ட அனர்த்த தணிப்பு கருத்திட்டங்களை
- அடையாளம் காணப்பட்ட அனர்த்த தணிப்பு கருத்திட்டத்தை முன்னெக்கையில் அதன்பயன் உறுதியை உறுதி செய்யும் பொருட்டு கருத்திட்டம் தொடர்பிலான சாத்தியக்கூற்று அறிக்கையினை தயார் செய்கையில் இனம் காணப்படாத அனர்த்த அபாய தணிப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியும் ஏற்படுகின்றது.
- அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்க்கும் வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த கையில் இந்த வேலைத் திட்டமானது பல்வேறுபட்ட துறைகளில் வியாபிப்பதன் காரணமாக ஒவ்வொரு துறையிலும் அவர்கள் திட்டமிட்டுள்ள வருடாந்த செயலாற்றுகை திட்டத்துடன் இக்குறிப்பிட்ட வேலைத்திட்டத்தினை சமப்படுத்துவது கணிசமான அளவு சவால் மிக்க ஒரு இலக்காகும்.
- மாவட்ட அனர்த்த அபாய தணிக்கைகளை தயார் செய்கையில் இதற்காக எதிர்பார்க்கப்பட்ட தரம் மிக்க தரவுகளை கீழ் மட்டத்தில் ஒன்று திரட்டுதல் மற்றும் சரியாக உரிய படிவத்தை பயன்படுத்தி கணினி மையப்படுத்தி மாவட்ட மட்டத்தில் இருந்து தேசிய தலைமையத்துக்கு பெற்றுக் கொள்வதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் எடுக்கிறது. நடைமுறை சிக்கல்கள் காரணமாக எதிர்பார்க்கப்படும் அனைத்து தரவுகளும் பூர்த்தி செய்யப்படாமல்யப்படாமை குறிப்பிட்ட தரவுகள் பூர்த்தி அடையும் வரையில் இறுதி முடிவினை பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்படும்.
- தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் குறைந்த அளவிலான மனித மற்றும் பௌதீக வளங்களை பயன்படுத்தி அனர்த்த முகாமைத்துவ நிலையமானது நடவடிக்கைகளை மேற்கொள்வதன் காரணமாக கருத்திட்டங்களை திட்டமிடுதல் நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் மதிப்பீடு செய்தல் ஆகிய அனைத்து சந்தர்ப்பங்களிலும் பலதரப்பட்ட சவால்களுக்கு முகம் கொடுக்கின்றது.

சவால்களை வெற்றி கண்டவாறு பாதுகாப்பான இலங்கையை உருவாக்குவதற்காக தமது உயரிய பங்களிப்பினை தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு மேற்கொள்வதுடன் கடந்த வருடங்களில் போன்றே எதிர்வரும் வருடங்களிலும் காணப்படுகின்ற வளங்களைப் பயன்படுத்தியவாறு பங்குதாரர்களுடன் உரிய ஒருங்கிணைப்புகளையும் மேற்கொண்டவாறு அனர்த்த அபாயங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நாட்டின் மனித, பௌதீக மற்றும் நிதி வளங்களை பாதுகாப்பதற்கு தயார் நிலையில் இருக்கின்றோம்.

5. முன்னாயத்த மற்றும் திட்டமிடல் பிரிவு

5.1 அறிமுகம்

2005 ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள வாறு மாவட்டங்கள், பிரதேச செயலகப் பிரிவுகள், அபாயத்துக்கு உட்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் அரச துறை நிறுவனங்கள் ஆகியவற்றுக்காக அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை தயார் செய்தல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முன் ஆயத்த திட்டமிடல் பிரிவின் பிரதான பணிகளில் ஒன்றாகும். வெள்ளம், மண்சரிவு, சுனாமி, புயல் காற்று போன்ற இலங்கையினுள் அடிக்கடி இடம்பெறும் , அனர்த்த முன்னாயத்த நடவடிக்கைகளை திட்டமிடுதல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முன்னாயத்த திட்டமிடல் நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

அனர்த்தங்கள் இடம் பெறுகையில் பதிலிருப்பதற்காக மாவட்ட மட்டத்தில் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு நல்கும் ஆவணமாக முன்னாயத்த திட்டத்தை குறிப்பிட முடியும். மாவட்டத்தில் இடம்பெறுகின்ற அனர்தங்களுக்கான பதிலுருப்பினை மேற்கொள்ளும் உயர் முகாமைத்துவ நிறுவனம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவாகும். குழு அங்கத்தவர்கள், உப குழுக்கள் மற்றும் அவர்களுடைடைய பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் என்ன என்பது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. நிர்வாகப் பிரதேசம் பற்றிய தகவல்கள், காணப்படுகின்ற இடர்கள், அபாய நிலைமை விளளவுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள அபாயநிலை மதிப்பீடுகள், தலைமை நிலையம் பற்றிய தகவல்கள், பிரதேசத்தில் காணப்படும் மனித மற்றும் பௌதீக வளங்கள் மற்றும் இடர் பதிலிருப்பு பொறிமுறை மற்றும் தொடர்புடைய பல்வேறுபட்ட தரப்பினருடைய பொறுப்புகள் பற்றிய தகவல்கள் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.


5.2 மாவட்ட மட்டத்திலான முன்னாயத்த திட்டம்

2018 ஆம் வருடத்துக்கு கிடைக்கப்பெற்ற ரூ.25 மில்லியனை பயன்படுத்தி மாவட்ட மட்டத்திலான வேலைத்திட்டங்கள் அனர்த்த முகாமைத்துவ அலகுகள் ஊடாக முன்னெடுக்கப்படுவதுடன் அதன் நிதி தேர்ச்சியானது **99.73%** எனவும், பௌதிக தேர்ச்சி யானது **100%** எனவும் அறியப்பட்டுள்ளது.

2018 இல் 25 மாவட்டங்களில் இடர்களுக்கான முன்னாயத்த திட்டங்களை தயார் செய்தல் மற்றும் அது பற்றி மீள்ஆய்வு செய்வதற்காக ரூ.25 மில்லியன் பணத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டது. நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் அனர்த்தங்கள் மூலம் மக்களுக்கு ஏற்படுகின்ற தாக்கங்களைக் கருத்தில் கொண்டு மாவட்டங்களுக்கு நிதி விடுவிக்கப்படுகின்றது. மாவட்டங்களுக்கு இடையில் நிதிப் பங்கீடு செய்யப்பட்டுள்ள விதம் மற்றும் அதன் பௌதீக மற்றும் நிதித் தேர்ச்சி பின்வருமாறாகும்.

வருடம்	பொதுத் திறைசேரியிடமிருந்து அங்கீகரிக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு	செலவு
2016	**12.**50	11.11
2017	**19.8**	**19.5**
2018	**25.0**	**24.93**

அட்டவணை 5.1: **பேரழிவு தயாரிப்புக்காக கடந்த ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டது**



குறிப்பு **5.1:**அனர்த்த முன்ஆயத்துக்காக முந்திய வருடங்களில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி

மாவட்டம், பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு வாரியாக இடர் முகாமைத்துவ சாத்தியக்கூற்றினை பலப்படுத்தும் பொருட்டு, பல்வேறுபட்ட முன்ஆயத்த நடவடிக்கைகளுக்காக 2018இல் முன்ஆயத்த திட்டமிடல் பிரிவானது நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டது. இடர் முகாமைத்துவ திட்டங்களை அச்சிடுதல் மற்றும் தயார் செய்தல் / மீளாய்வு செய்வதற்காக பங்குதாரர்களினது கூட்டங்கள் , செயலமர்வுகளுக்காக மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவு வாரியாக நிதி வழங்கப்பட்டுள்ளது. சுனாமி, வெள்ளம் மற்றும் மண்சரிவு தொடர்பில் ஒத்திகை வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல், இடர்களை வரைபடமாக்கல், அபாய நிலைப் பகுப்பாய்வு, கிராமிய மட்டத்தில் இடர் முகாமைத்துவ குழுக்களை தாபித்தல், போன்ற சமூக மட்டத்திலான இடர் பதிலிருப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல், நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டுக்கள் வெடிப்பதற்கான ஒரு முன்உபாய வழிமுறையாக நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டுக்களை கீழ் சரிவுகளில் வாழும் மக்களுக்கு அவசர நிலைமைகளின்போது பதிலிருப்பதற்காக சமூக பங்கேற்புடன் முன்ஆயத்த திட்டங்களை தயார் செய்தல் மற்றும் மாவட்ட மீளாய்வு கூட்டங்களை நடாத்துவதற்காகவும் இப்பிரிவானது நிதி வழங்குகிறது.

5.3 பிரதேச மட்டத்தில் சமூக முன்ஆயத்த பதிலிருப்பு நடவடிக்கைகளை தயார் செய்தல்

கிராமங்களில் காணப்படும பல்வேறுபட்ட இடர்களைக் கருத்தில் கொண்டு சமூக அனர்த்த முன்ஆயத்த பதிலிருப்பு வேலைத்திட்டங்கள் பிரதேச மட்டத்தில் தயார் செய்யப்பட்டன. சமூக பங்கேற்பு மற்றும் சமூக மட்டத்திலான அனர்த்தங்களை வரைபடமாக்குதல் பிரதேச மட்டத்திலான திட்டமிடல் செயன்முறையின் பிரதான பணியாகும். மேலும், சமூக மட்டத்திலான இடர் வரைபடங்களை தயார் செய்தல், பாதுகாப்பான வீதிகள் மற்றும் பாதுகாப்பான இடங்களை இனம் காணுதல், முதலுதவி, உள்ளகரீதியாக இடம்பெயர்ந்த நபர்களுக்கு முகாம்களை அமைத்தல் மற்றும் முகாம் முகாமைத்துவம் பற்றி அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. 2018இல் கம்பஹா, களுத்துறை, நுவரெலியா, அநுராதபுரம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பிரதேச மட்டத்திலான 05 சமூக முன்ஆயத்த பதிலிருப்பு திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், அதன் பௌதீகத் தேர்ச்சி **100%** ஆகும்.

5.4 சர்வதேச / தேசிய / மாவட்ட / பிரதேச மட்டத்திலான ஒத்திகை வேலைத்திட்டங்கள்

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ மற்றும் இதில் நேரடியாகத் தொடர்புடைய உத்தியோகத்தர்களை முதன்மையாகக் கொண்டு அனர்த்தத்துக்கு முந்திய நிலை, அனர்த்த நிலை மற்றும் அனர்த்தத்துக்கு பின்னரான சந்தர்ப்பங்களில் அவர்களுடைய புதிய பொறுப்புகளை இனம் கண்டவாறு மேற்கொள்ளப்படுகின்ற ஒத்திகை வேலைத் திட்டமாகும்.

- சர்வதேச ஒத்திகை வேலைத்திட்டங்கள்
- 2018 செப்டம்பர் மாதம் 05ஆந் திகதி கொண்டாடப்படும் சர்வதேச சுனாமி விழிப்புணர்வூட்டல் தினத்தை அனுஷ்டித்தல் மற்றும் பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக சுனாமி அனர்த்தத்திற்கு உட்படும் 14 மாவட்டங்களில் 03 மாவட்டங்களான காலி, அம்பாறை மற்றும் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் சர்வதேச சுனாமி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டது எஞ்சிய

மாவட்டங்களில் மக்களுக்கான விழிப்புணர்வும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன, ரூ **1,888,529.58 (ரூ. 1.88** மில்லியன்) செலவு ஏற்பட்டதுடன் இதில் **14**, **8318**பேர் பங்கேற்றனர்)

- சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்படும் 14 மாவட்டங்களான கொழும்பு, கம்பஹ, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, புத்தளம், மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் சுனாமி கம்பம் நாட்டப்பட்டுள்ள சகல பிரதேச செயலகப் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சகல பங்காளி நிறுவனங்களும் இதில் பங்கேற்றனர். இந்த வேலைத்திட்டம் தாக்கம் செலுத்தும் பிரதேசங்களில் வாழும் அனைத்து மக்களும் ஊடகங்கள் ஊடாகவும் துண்டுப்பிரசுரங்களை பகிர்ந்தளித்தல் மற்றும் விளம்பர பதாகைகளை காட்சிப்படுத்துதல் மூலம் அறிவுறுத்தப்பட்டார்கள். இந்த சுனாமி ஒத்திகை வேலைத்திட்டத்தை மேற்பார்வை செய்வதற்காக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் மேற்பார்வை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள். மேற்பார்வையாளர்கள் வழங்கிய தகவல்களுக்கு ஏற்ப அனர்த்த தொடர்பாடல் நடவடிக்கைகளை சரியாக தயார் செய்வதில் இந்த ஒத்திகை வேலைத்திட்டங்கள் மிகவும் முக்கியமானவை என்பது தெளிவானது.

5.4.1 வலய மற்றும் தேசிய சுனாமி ஒத்திகை வேலைத்திட்டம் (2018.09.05) (IOWAVE – 2018)

- ஒத்திகை நிகழ்ச்சி முன்னெடுக்கப்பட்டுள்ள மாவட்டங்கள்

மாவட்டம்	பிரதேச செயலகப் பிரிவு	கிராமி உத்தியோத்தர் பிரிவுகள்
காலி	ஹிக்கடுவை	**03**
அம்பாறை	நின்தவூர்	**06**
முல்லைத்தீவு	மாரிடிமேபத்து	**06**

அட்டவணை **5.2:** ஒத்திகை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ள மாவட்டங்கள்

- **9.3** ரிட்டர் பூமியதிர்ச்சி பதியப்பட்டு ஒத்திகை நிர்மாணிக்கப்பட்டது.
- இது பிரதானமாக,
  1. அமைச்சினை அறிவுறுத்துதல்
  2. மாவட்ட அலகு பேச்சுவார்த்தை
  3. பங்காளி நிறுவனங்களை அறிவுறுத்துதல்
  4. வுயடிடந வுழி ஒத்திகை.
  5. கிராம உத்தியோகத்தர் பிரிவு வாரியாக 77 சுனாமி கம்பங்கள் 14 மாவட்டங்களில் பரிசீலிக்கப்பட்டன.
- காலி மாவட்டத்திலிருந்து 332பேரும், அம்பாறை மாவட்டத்திலிருந்து 930பேரும், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 372பேரும் பாதுகாப்பு நிலையங்களுக்கு

அகற்றப்பட்டார்கள். ஒட்டுமொத்தமாக இந்த 03 மாவட்டங்களின் 15 கிராம உத்தியோகத்ர் பிரிவுகளிலிருந்து 4147பேர் அகற்றப்பட்டார்கள்.




காலி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச சுனாமி ஒத்திகை வேலைத்திட்டம்

- **மாவட்ட அனர்த்த ஒத்திகை வேலைத்திட்டம்**

வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களுக்கு உட்படும் மாவட்டங்களில் நடாத்தப்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு ஒத்திகை வேலைத்திட்டங்களுக்கு ரூ. **5,485,437.40** வழங்கப்பட்டதுடன், இதில் **38266**பேர் பங்கேற்றார்கள்.

	மாவட்டம்	செலவு செய்யப்பட்ட நிதி (ரூ)	பங்கேற்றவர்கள்
1	களுத்துறை	**755,146.40**	**4600**
2	காலி	**471,219.00**	**3425**
3	இரத்தினபுரி	**701,545.00**	**3379**
4	பதுள்ளை	**747,000.00**	**3643**
5	நுவரெலியா	**281,510.00**	**2420**
6	மாத்தளை	**559,110.00**	**6200**
7	மட்டக்களப்பு	**478,046.00**	**5789**
8	வவுனியா	**297,147.00**	**1033**
9	மன்னார்	**110,577.00**	**1709**
10	கேகாலை	**699,257.00**	**3318**
11	கிளிநொச்சி	**384,880.00**	**2750**
		5,485,437.40	**38266**

அட்டவணை **5.3:** மாவட்டங்களில் நடாத்தப்பட்ட ஒத்திகை வேலைத்திட்டங்கள் பற்றிய சுருக்கம்

குறிப்பிட்ட பதிலிருப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் பங்காளி நிறுவனங்களை அடையாளம் காணுதல், அனர்த்த பதிலிருப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் தரப்பினருடைய கடமைகளை அவர்களுக்கு உணர்த்துதல், அனர்த்த பதிலிருப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் தரப்பினருக்கும் இடையே ஒருங்கிணைப்பினை உறுதிப் படுத்துதல் மற்றும் புரிந்துணர்வினை கட்டியெழுப்புதல், அனர்த்த

பதிலிருப்பு நடவடிக்கைகளுக்காக மாவட்ட கொள்ளளவு மற்றும் பலவீனங்களை அடையாளம் காணுதல், ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட ஒத்திகை திட்டம் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள பொறிமுறையினை பரிசீலித்தல், மாவட்ட செயலக அரச பொறிமுறை மற்றும் மாகாண பொறிமுறைக்கு இடையிலான தொடர்பு மற்றும் அரசியல் தலையீட்டை அனர்த்த பதிலிருப்பு நடவடிக்கைகளில் கருத்தில் கொள்ளுதல், அனர்த்த வலயங்களில் வாழுகின்ற மக்கள் மற்றும் வெளித் தரப்பினர் இ டையே ஒருங்கிணைப்பினை உறுதி செய்தல், மிகவும் சிறந்த மற்றும் வினைத்திறனான அனர்த்த பதில் இருப்பு பொறிமுறையினை சகல தரப்பினர்கள் மற்றும் மக்கள் மத்தியில் உறுதிப்படுத்துதல், சமூகத்தினுள் அனர்த்த முன்னாயத்த கலாச்சாரம் மற்றும் சிறப்பான கலாச்சாரத்தை நோக்கி மக்களை பழக்கப் படுத்துதல்.




பதுள்ளை மாவட்டத்தில் மண்சரிவு ஒத்திகை நிகழ்ச்சித்திட்டம்

5.5 கிராமிய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள அனர்த்ததுக்கான முன்ஆயத்தம் வேலைத்திட்டம்

2018 ஆம் ஆண்டினுள் வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற அனர்த்தங்களுக்கு இலக்காவதற்கான அதிகூடிய நிகழ்தகவினைக் கொண்டுள்ள மாவட்டங்களில், கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கியவாறு இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 13 வேலைத்திட்டங்களும், கொழும்பு மாவட்டத்தில் 20 வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதில் 2018தேபர் பங்கேற்றனர்.

5.6 பாரிய நீர்த்தேக்க அணைகளை அண்டியதான இடர்கள் தொடர்பிலான முன்ஆயத்த நடவடிக்கைகள்

சூறாவளி அல்லது பூமியதிர்ச்சி ஏற்படும் ஒரு சந்தர்ப்பத்தில் நீர்த்தேங்கங்களின் அணைக்கட்டகளை அண்டிதாக அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்களைக் கருத்தில் கொண்டு. தெரிவுசெய்யப்பட்டுள்ள பிரதான நீர்த்தேங்கங்களை அண்டியதாக தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் மக்களினது முன்ஆயத்த இயலுமையை மேம்படுத்தும் நோக்கில் இந்த வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2018ஆம் ஆண்டினுள் அணைக்கட்டுகளை அண்மித்த 20 விழிப்புணர்வூட்டல் மற்றும் ஒத்திகை வேலைத்திட்டங்கள் அமம்பாந்தோட்டை, பதுள்ளை, அநுராதபுரம், பொலன்னறுவை, மட்டக்களப்பு, அம்பாறை, கிளிநொச்சி, க்ணடி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்டுள்ளன. தேடுதல் மற்றும் மீட்பு, முதலுதவி முகாம்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் கிராமங்களின் பாதுகாப்பு ஆகிய நடவடிக்கைகள் தொடர்பில் உப குழுக்களை அமைத்தல், சமிக்ஞை பதாதைகளை காட்சிப்படுத்துதல் மற்றும் இறுதியாக பாதுகாப்பான இடங்களை நோக்கி மக்களை அழைத்துச் செல்லுதல் பற்றிய ஒத்திகை வேலைத்திட்டங்களை நடாத்துவதன் மூலம் நீர்த்தேக்கங்கனை அண்டி வாழ்கின்ற அபாயத்துக்கு

உட்பட்டுள்ள மக்களுக்கான விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்களும் இந்த வேலைத்திட்டத்தினுள் உள்ளடங்குகின்றது.

5.7 நாட்டினுள் நீரிழ் மூழ்கியமையால் இடம்பெறும் உயிரிழப்புக்களை குறைத்தல்

இலங்கையில் நீரிழ் மூழ்குவதனால் ஏற்படும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை கடந்த ஒரு சில வருடங்களாக அதிகரித்து வருகின்றது. இந்த வேலைத்திட்டத்தின் நோக்கம், அபாயத்துக்கு இலக்காகி உள்ள பிரதேசங்களில் சமிக்ஞை பதாதைகளை காட்சிப்படுத்துதல் மற்றும் அதன் மூலம் அபாயமிக்க குளங்கள், ஆறுகள் மற்றும் வாவிகளில் குளிக்க வேண்டாமென மக்களை அறிவுறுத்துவதாகும். கண்டி, மாத்தளை, யாழ்ப்பாணம், இரத்தினபுரி, பொலன்னறுவை, காலி அம்பாந்தோட்டை, கேகாலைமற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் இத்தகைய 225 சமிக்ஞை பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாவட்டம்	சமிக்ஞை பதாதைகளின் எண்ணிக்கை
கண்டி	**04**
மாத்தளை	**24**
யாழ்ப்பாணம்	**53**
இரத்தினபுரி	**20**
பொலன்னறுவை	**25**
காலி	**10**
அம்பாந்தோட்டை	**22**
கேகாலை	**34**
மன்னார்	**33**
மொத்தம்	**225**

அட்டவணை **5.4:** ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ள சமிக்ஞை பதாதைகள்

மேலும், அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவையில் அமைந்துள்ள வைபவ மண்டபங்களில் ஏற்படும் நீரிழ் மூழ்குதலை தணிப்பதற்கான விசேட வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

5.8 வைத்தியசாலை அவசர முன்ஆயத்த திட்டங்களை தயார் செய்தல்

வைத்தியசாலை அவசர முன்ஆயத்த திட்டங்களை தயார் செய்வதன் நோக்கம் யாதெனில், வைத்தியசாலை பணியாட்குழுவினரது பாதுகாப்பு, நோயாளர்களது பாதுகாப்பினையும் அவசர அனர்த்தத்தின்போது வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளர்களுக்கு அவர்களுக்கு சிகிச்சை வழங்குதல் மற்றும் அதற்கு பதிலிருக்குமுகமாக திட்டங்களை தயார் செய்வதாகும். இந்த வேலைத்திட்டத்தினுள் வைத்தியசாலைகள் உள்ளேயும், அண்மித்த பிரதேசங்களில் இயற்கையாக ஏற்படும் அனர்த்தங்களை இனம் கண்டு அவற்றை வரைபடமாக்கி, அதற்கேற்ப அந்த அனர்த்தங்களை தணிப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளுஅல், அறிவுறுத்துதல் மற்றும்

ஒத்திகை வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் போன்றவையாகும். இந்த வேலைத்திட்டமானது 19 மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

5.9 பாடசாலை அனர்த் பாதுகாப்பு வேலைத்திட்டம்

கல்வி அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ஆகியன இணைந்து அனர்த் அபாயம் காணப்படும் பாடசாலைகளில் பாடசாலை மாணவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. 25 மாவட்டங்களில் இத்தகைய 93 வேலைத்திட்டங்கள் 2018இல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்த வேலைத்திட்டங்கள் மூலம் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசரியர்களுடன் அனர்த்த அபாய வரைபடங்களை தயார் செய்தல், அனர்த்தம் குறித்து அறிவுறுத்துதல் மற்றும் ஒத்திகை வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் இதன் நோக்கமாகும்.

5.10 பிரதேச மட்டத்திலான பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம்

அனர்த்த முனாமைத்துவ அமைச்சு மற்றும் சமூக வலுவூட்டல், நலனோம்புகை மற்றும் மலைநாட்டு உரிமைகள் பற்றிய அமைச்சு ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் மாவட்ட மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரையில் அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையை பலப்படுத்துவதற்காக பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பாதுகாப்பான இடங்களை இனம் காணுதல் மற்றும் அனர்த்த அபாய வரைபடங்களை தயார் செய்து அவசர அனர்த்த நிலைமைகளின்போது கிராமிய மக்களுக்கு அறிவுறுத்தும் செயன்முறையொன்று தயார் செய்யப்படுகின்றது. தற்பேது 19 மாவட்டங்களில் 168 பிரதேச மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்காக **ரூ. 6,280,772.49** நிதித் தொகை மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

	மாவட்டம்	வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை	பங்கேற்றவர்களின் எண்ணிக்கை
01	கம்பஹ	**18**	**2132**
02	களுத்துறை	**12**	**1337**
03	காலி	**10**	**1803**
04	மாத்தறை	**12**	**960**
05	அம்பாந்தோட்டை	**12**	**790**
06	பதுள்ளை	**11**	**900**
07	குருநாகல்	**15**	**2001**
08	அநுராதபுரம்	**10**	**1198**
09	பொலன்னறுவை	**7**	**453**
10	மன்னார்	**5**	**424**
11	புத்தளம்	**10**	**840**
12	திருகோணமலை	**6**	**542**
13	மட்டக்களப்பு	**4**	**321**

14	மொணறாகலை	**3**	**120**
15	அம்பாறை	**2**	**135**
16	யாழ்ப்பாணம்	**15**	**1512**
17	கிளிநொச்சி	**4**	**210**
18	வவுனியா	**4**	**336**
19	முல்லைத்தீவு	**8**	**507**

அட்டவணை **5.5: 2018**இல் நடாத்தப்பட்ட பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை

5.11 பருவப்பெயர்ச்சி முன்னாயத்த வேலைத்திட்டம் - தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச

தென்மேல் மற்றும் வடகிழக்கு பருவப்பெயர்ச்சியினால் பாதிக்கப்படும் மாவட்டங்களில் செயலாளர்கள்டன் முன்னாயத்த நடவடிக்கைகளாக அபாய முன்னறிவித்தல் செயன்முறைகள், அவசரமாக இடம்பெயர்தல், குழுக்களை குறிப்பிட்ட இடத்துக்கு அனுப்புதல் மற்றும் நிவாரண சேவை நடவடிக்கைகளுக்கள் மற்றும் முகாம் முகாமைத்துவம் பற்றிய பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் மூலம் ஏற்படக்கூடிய உயிர் மற்றும் சொத்து இழப்புக்களை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. தேசிய மட்டத்தில் வளிமண்டலவியல் நிறுவனமாக வளிமண்டலவியல் திணைக்களத்தினால் அதிக மழைவீழ்ச்சி மற்றும் கடுங் காற்று குறித்தும், புதிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் மண்சரிவு பற்றியும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் வெள்ளப்பெருக்கு தொடர்பிலும் எதிர்வுகூறல்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய மட்டத்திலான பங்காளி நிறுவனங்களுடனும் பதிலிருப்பு குழுக்கலான முப்படை, பொலீஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்துடன் அடிப்படை பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்படுவதுடன் மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டம் வரையில் அரசாங்க உத்தியோகத்தர்களும் பாதிக்கப்படுகின்ற மக்களும் இதற்கு முகம் கொடுக்கையில், ஏற்படுகின்ற உயிர் இழப்புகள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்பினை குறைத்துக் கொள்ளுதல் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வேலைத் திட்டத்தின் மூலம் நாட்டில் வருடாந்தம் ஏற்படும் தென்மேல் மற்றும் வடகிழக்கு பருவப்பெயர்ச்சி காலகட்டங்களில் நாட்டில் ஏற்படும் அதி கூடிய மழை வீழ்ச்சி மாற்றம் கடும் புயல் நிலமைகளை அடிப்படையாகக் கொண்டு அதற்கு இலக்காகும் மாவட்டங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்களை கூட்டி, பாதிப்பு ஏற்படக்கூடிய நிலைமைகளுக்கு (வெள்ளம், மண்சரிவு, சூறாவளி) குறிப்பிட்ட மாவட்டங்களில் தயார் செய்வதே இதன் நோக்கமாகும்.

2018ஆம் ஆண்டில் பருவப்பெயர்ச்சி முன்னாயத்த வேலைத்திட்டங்கள் தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச வாரியாக 25 மாவட்டங்களில் 128 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



ஆம்பாந்தோட்டை



கொழும்பு


5.12 தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் 2018-2030

2005 ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இடர்முகாமைத்துவ சட்டத்துக்கு ஏற்ப தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இனி அனைத்து திட்டங்களும் தயார் செய்யப்படுதல் வேண்டும். தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டமானது இலங்கையின் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலான பரந்த ஒரு சட்டகத்தை பிரதிநித்துவ படுத்துவதுடன் இது நாட்டினுள் அனர்த்த அபாயத்தை தணிப்பது தொடர்பிலான ஐந்து வருட திட்டமாகும். அனர்த்த முகாமைத்துவ சட்டத்துக்கு ஏற்ப மேற்குறிப்பிட்ட திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய அவசர கருமமாற்றல் திட்டம், நிறுவன ரீதியான அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் ஏனைய அனைத்து முகாமைத்துவத் திட்டங்கள் தயார் செய்யப்படுகின்றன.

ஐக்கிய நாடுகளின் அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான செந்தாய் சட்டத்துக்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ள 2018-2030 வரையிலான தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தின் முதலாவது சட்ட மூலம் தற்போது வெளியிடப்பட்டுள்ளதுடன், அதன் முதலாவது மற்றும் இரண்டாவது தொகுதிகள் (செயலாற்றுகை பட்டியல்) அனைத்து அனர்த்த முகாமைத்துவ மற்றும் பங்காளி நிறுவனங்களுக்கு பிரேரணைகள் மற்றும் கருத்துக்களுக்காக ஆற்றுப் படுத்தப்பட்டுள்ளது.

5.13 உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி கருத்திட்டத்தின் தாக்கத்துக்கு உட்பட்டுள்ள பிரதேசங்களை அண்மித்த விசேட அனர்த்த முகாமைத்துவ திட்டம் (Special Disaster Management Oparation Center (SDMOC – UMA OYA)

- இந்த விசேட பிரிவானது அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு வசதிப்படுத்தும் முகமாக, அமைச்சின் செயலாளரினால், அதிமேதகு ஜனாதிபதியின் விசேட ஆலோசனையின்படி தாபிக்கப்பட்டுள்ளது.
- அதன் பிரதான பணிகள்,
    1. அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை தயார் செய்தல்.
    2. தென்மேல் மற்றும் வடகிழக்கு பருவப்பெயர்ச்சிக்கு முன்ஆயத்தம் செய்தலும், ஏற்படக்கூடிய மண்சரிவு அபாயங்களை இனம் காணுதலும்.
    3. குறிப்பிட்ட தரப்பினருக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல்களை மேற்கொள்ளுதல்.
    4. பருவப்பெயர்ச்சி காலத்தில் ஏற்படும் அவசர அனர்த்த நிலமைகளுக்காக துரித பதிலிருப்பினை மேற்கொள்ளுதல்.
- இந்த செயற்பாடானது மூன்று மாத காலமாக 03 பிரதேச செயலகப் பிரிவுகளில் முன்னெடுக்கப்பட்டது. முக்கிய நோக்கமாக ஏற்படக்கூடிய அனர்த்த முகாமைத்துவம் இதில் இடம்பெற்றது. (பண்டாரவளை பி.செ., அல்லே பி.செ, வெலிமட பி.செ)
- இதன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள விதத்தை பின்வருமாறு உருவப் படத்தின் மூலம் காட்ட முடியும்.



D. M. C	அனர்த்த முகாமைத்துவ நிலையம்
G. S. M. B	புவிச்சரிதவியல் மற்றும் அகழ்வுப் பணியகம்
C. E. B	தேசிய மின்சார சபை
N. B. R. O	தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு

இதன்போது பாதிக்கப்பட்டுள்ள 24கி.உ.பிரிவுகள் 03 பி.செயலகப் பிரதேசங்களில் இனம் காணப்பட்டுள்ளன.

- இதன்போது ஏற்பட்டுள்ள முக்கிய நன்மையாக திடீரென ஏற்படும் மண்சரிவு மற்றும் வெள்ள அனர்த்தங்களிலிருந்து மக்களை அகற்றுவதற்கான இயலுமை கிடைக்கப்பெற்றுள்ளதைக் குறிப்பிட முடியும்.
- 05 மில்லியன் நிதி ஏற்பாடு இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- பொதுமக்களுக்கு முறைப்பாடுகளை குறிப்பிடுவதற்கான மாதிரியையும் அனர்த்த பதிலிருப்பு திட்டமொன்றினையும் மக்களுக்களுக்கு வழங்குவதற்கான வாய்ப்புக் கிடைத்தமை அதில் அடையப்பட்ட நன்மையாகும்.

5.14 பங்காளி நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள்

5.14.1 வானிலையுடன் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ வேலைத்திட்டம் (CRIWM)

இக்கருத்து திட்டமானது ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதன்போது மல்வத்து ஓயா, மீ ஓயா, யான் ஓயா ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வானிலைக்கு தாக்குப்பிடிக்கக் கூடிய முறையில் வறட்சியான

காலநிலையின் போதுகூட நீரை வழங்கக் கூடிய முறையில் கருத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இதன்போது வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற அனர்த்தங்கள் இனங்காணப்பட்டு அவற்றுக்கான தீர்ப்வுகளை கண்டடைவது நோக்கமாகக் அமைந்ததுடன், இதன் மூலம் அனுராதபுரம், வவுனியா, குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்கள் நன்மை அடைந்தன.

ஆறு - மல்வத்து ஓயா				
இல	**மாவட்டம்**	**பிரதேச செயலகப் பிரிவு**	**தொடர்படு மலைத் தொடரன் பெயர்**	**கிராம உத்தியோகத்தர் பிரிவின் பெயர்**
1	அநுராதபுரம்	பளுகஸ்வெவ	பளுகஸ்வெவ	**601 -** பளுகஸ்வெவ
				603 - ஹொரிவில
2	அநுராதபுரம்	கலென்பிந்துனுவெவ	சிவலகுலம	**182 -** சிவலகுலம
				160 -தம்மென்னாகம
				187 - இகல கல்குலம
				181 - முரியகடவெல
3	வவுனியாவ	வெங்கலவெட்டிகுலம்/ வவுனியா தெற்று (சிங்களம்)	மதுவால்தகுலம	அலகு 9 பவத்குலம் **- 211**C
				பெரியபுளியன்குலம் **- 211**
				Acre **400-209**G
				பெரியஉழுகுலம் **- 209**
4	வவுனியா	வெங்கலவெட்டிகுலம்	துடுவாகை குலம்	நெரியகுலம் **- 209** B
		வவுனியா தெற்கு		சின்ன சிப்பிகுலம் **- 210** A
	அநுராதபுரம்	மெதவச்சி		பெரியபுளியன்குலம் **- 211**
				முதலியர்குலம் **- 210**
				முதலியர்குலம் **- 211**
				முதலியர்குலம் **- 212**
				மரதன்மாதூவ - C **209** c
				பெரியகுலம் **- 49**
ஆறு- மீ ஓயா				
5	குருநாகல்	பொல்பித்திகம	மாமுணுகம	இகல திபிரியாய **- 344**
				மாமுணுகம **- 345**
6	குருநாகல்	அஹட்டுவெவ	அங்குருவெல்ல	ஹுணுகல்லாவ **- 128**
7	புத்தளம்	நவகத்தேகம	மெந்தே ரபேவா/ ரபெவா	மஹ மெந்தாவ **- 643/1**
				மொரகஹவெவ **- 643**
ஆறு - யான் ஓயா				
8	அநுராதபுரம்	ஹொரவ்பொத்தானை	பண்டார குபுக்கெவ	தியதித்த **- 151**
				பறங்கியவாடி **- 149**

அட்டவணை **5.6:** தெரிவுசெய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தொடர்படு அருவி முறைமைக்காக அனர்த்த முன்ஆயத்த மற்றும் பதிலிருப்பு நடவடிக்கைகளின் முன்ஆயத்தம்

5.14.2 பாடசாலை சுனாமி அனர்த்த ஒத்திகை நிகழ்ச்சித்திட்டம்

2004 டிசெம்பர் 26ஆந் திகதி இடம்பெற்ற சுனாமிப் பேரழிவானது இலங்கையில் 14 மாவட்டங்களில் தாக்கம் செலுத்தியதுடன், 35000 உயிர்களுக்கு சேதம் ஏற்படுத்தியது. மேலும் வீடுகள், வீதிகள், ஹோட்டல், துறைமுகம், நீர்மின் வழங்கல்கள் ஆகியன பாரிய அளவில் பாதிக்கப்பட்டன.

சுனாமி பேரழிவின் போது 183 பாடசாலைகள், 18 தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 04 பல்கலைக்கழகங்கள் பாதிக்கப்பட்டதுடன், 100,000 மாணவர்களும் பாதிக்கப்பட்டார்கள். பாடசாலை அனர்த்த முன்னாயத்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம், சுனாமி அபாய அறிவிப்பு வரும்போது பாடசாலையின் அதிபர், ஆசிரியர் மற்றும் மாணவர்கள் தீர்மானங்களை மேற்கொள்கையில்

அவர்களது முன்னாயத்தம் தொடர்பில் அவர்களை அறிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் சுனாமி அனர்த்தம் ஒன்று நிகழ்கையில் பாடசாலை மாணவர்களை ஆசிரியர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இட்டுச் செல்வது எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலை அனர்த்த முன்னாயத்த அமைப்பினால் அதிகமாக அனர்த்தங்களுக்கு இலக்காகும் மாவட்டங்களான காலி, யாழ்ப்பாணம், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் 05 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு ஒத்திகை நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

- விந்யாலோக்க கல்லூரி - காலி
- பெரியகல்லார் மத்திய கல்லூரி - மட்டக்களப்பு
- மெதோதிஸ்ச மகளீர் மகா வித்தியாலயம் - யாழ்ப்பாணம்
- ஹார்சலி கல்லூரி - யாழ்ப்பாணம்
- சஹிரா கல்லூரி - அம்பாறை

6. பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் பிரிவு


6.1 அறிமுகம்

2005 ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தினால் இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ விடய பொறுப்பினை வினைத்திறனாகவும் பயனுறுதி மிக்கதாகவும் நாட்டினுள் முன்னெடுப்பதற்கு தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் வேலைத்திட்ட முன்னெடுப்பு பொறுப்பானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உலகளாவிய வெப்பநிலை, வானிலை மற்றும் காலநிலை மாற்றங்கள், நகரமயமாதல், ஆற்றுப் பள்ளத்தாக்கு குடியிருப்புகளாக மாறுதல்மற்றும் முறையற்ற அபிவிருத்திப் பணிகளைப் போன்றே அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பில் நாட்டு மக்களுடைய அறிவு குறைவாகக் காணப்படுதலும் காணப்படுகின்ற சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு மக்கள் காட்டும் குறைந்த பங்களிப்பு காரணமாகவும் அனர்த்தங்களின் பாதிப்பு அதிகரிக்கின்றது என்பது மிகவும் தெளிவான ஒரு விடயமாகும். இந்த நிலைமையானது கடந்த சில வருடங்களாக இடம்பெற்ற அனர்த்தங்கள் மற்றும் அந்த அனர்த்தங்கள் இடம்பெற்ற விதம் தொடர்பில் அவதானிக்கையில் தெளிவாகிறது.

மேற்குறிப்பிட்ட நிலைமையில் நாங்கள் முகம் கொடுத்துள்ள அனர்த்த மற்றும் அனர்த்த முகாமைத்துவ சவால்களை வெற்றிகொள்வதற்கு அல்லது அவற்றுக்கு உறுதியாக ஒரு நாடு என்ற ரீதியில் முகம் கொடுப்பதற்கு அனர்த்த மற்றும் அனர்த்த முகாமைத்துவ செயல்முறை தொடர்பில் நாட்டு மக்களையும் குறிப்பிட்ட தரப்பினரையும் அதுபற்றிய நடைமுறை சார்ந்த அறிவினால் போஷிப்பது தற்போது முக்கிய பணியாக அமைந்துள்ளது. அனர்த்த மற்றும் அனர்த்த முகாமைத்துவம் பற்றி நாட்டு மக்கள் அறிந்து கொள்வதன் மூலம் அவர்களுடைய ஆற்றல்கள் மற்றும் இயலுமைகள் மேம்படுவதுடன் இதன் மூலம் அந்தந்த மக்களுக்கு முகம்கொடுக்க நேர்ந்துள்ள அனர்த்த அபாய சவால்களுக்கு நன்றாக முகம் கொடுப்பதற்கும் அவற்றை இயலுமான அளவு வெற்றியை நோக்கி கொண்டு செல்வதற்கும் வாய்ப்பு கிட்டுகிறது. அதுமாத்திரமன்றி, நாட்டில் அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையினை வினைத்திறனாகவும் பயனுறுதி மிக்கதாகவும் செயற்படுத்துகையில் அதன் மூலம் உயிர் மற்றும் சொத்து அழிவு குறைவது மாத்திரமன்றி நாட்டின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை இலகுவில் அடையவும் வாய்ப்பு கிட்டுகிறது.

இதற்கமைய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சி பிரிவானது நாட்டு மக்களுக்கு அனர்த்த அபாயம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் மற்றும் பயிற்சி வழங்கும் பணிகளை மேற்கொள்கிறது.2018ஆம் ஆண்டில் தேசிய மட்டத்தில் இருந்து மாவட்ட மட்டம், பிரதேச செயலகப் பிரிவு மட்டம் மற்றும் கிராமிய மட்டம் வரையில் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ளடங்குமாறு அந்தந்த மாவட்டங்களில் காணப்படுகின்ற அனர்த்த அபாய நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அதற்கமைய பயிற்சி மற்றும் அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள் பரந்தளவில் முன்னெடுக்கப்பட்டது இதில்27171பேர் பங்கேற்றதுடன் முன்னெடுக்கப்பட்ட கண்காட்சிகளில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை சுமார் 62450 ஆகும். இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக 2018இல் பொதுத்திறைசேரியான ரூ.25 மில்லியன் நிதியை வழங்கியது. தேசிய மட்டத்திலான வேலைத்திட்டங்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் விழிப்புணர்வூட்டல் பிரிவினால் முன்னெடுக்கப்பட்டதுடன், மாவட்ட மட்டத்தில், பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் மற்றும் கிராமிய மட்டத்திலான வேலைத்திட்டங்கள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைய 2018இல் கிடைக்கப்பெற்றுள்ள நிதித் தொகையான ரூ.25மில்லியன் பயன்படுத்தப்பட்டதுடன், அதன் நிதித் தேர்ச்சி **97 %** ஆகக் காணப்படுவதுடன், பௌதீக தேர்ச்சி **100%** என அறியப்பட்டுள்ளது. **2013-2018** வரையில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்களுக்காக கிடைக்கப்பெற்றுள்ள நிதியின் அளவானது பின்வரும் உருவத்தில் காட்டப்பட்டுள்ளது.



குறிப்பு **6.1:** பயிற்சிப் பிரிவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தேர்ச்சி **2013 - 2018**

6.2 தேசிய மட்டத்திலான பயிற்சி வேலைத்திட்டங்கள்

6.2.1 இலங்கையில் அனைத்து முகாமைத்துவ பொறிமுறையினை வினைத்திறனாகவும் பயனுறுதி மிக்கதாகவும் நாட்டினுள் செயற்படுத்துவதற்காக நீர்ப்பாசன மற்றும் நீர் வள அனர்த்த முகாமைத்துவ அமைச்சு சமூக வலுவூட்டல் மற்றும் நளநோன்புகை அமைச்சும் இணைந்து முன்னெடுக்கும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள்

நாட்டின் அனைத்து முகாமைத்துவ பொறுப்பானது ஒரு நிறுவனத்துக்கு அல்லது ஒரு அமைச்சுக்கு தனியே முன்னெடுக்க முடியாத ஒரு விடயமாகும். இந்த விடயத்தை அனைத்து பங்"காளி நிறுவனங்களும் அமைப்புகளும் பொதுமக்களும் ஒன்றாக இணைந்து மேற்கொள்ள

வேண்டுமாகையால் இங்கு ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தும் பிரதான முன்னோடியாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் காணப்படுகின்றது. அதற்கமைய அனர்த்த முகாமைத்துவ நிலையம் 2017இல் இதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் சமூக வலுவூட்டல் சமூக நலனோம்புகை அமைச்சுடன் இணைந்து மாவட்ட மட்டத்தில் கிராமிய மட்டம் வரை சமூக நலனோம்புகை உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல் மற்றும் பயிற்சி வேலைத்திட்டமொன்றை 2018இல் முன்னெடுத்தது.

இதற்கேற்ப மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தலைமை உத்தியோகத்தர்களை பயிற்சியாளர்களாக பயிற்றுவித்து அவர்கள் மூலமாக ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் சமூகத்தை அறிவுறுத்தும் மற்றும் பயிற்றுவிக்கும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. மாவட்ட மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் சமூக நலனோம்புகை அமைச்சு வேலைத்திட்டங்களுக்கான திட்டங்களை தயார் செய்தல் ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வையினை மேற்கொண்டதுடன் அமைச்சு மட்ட த்திலிருந்து இரு அமைச்சுக்களினதும் ஒரு பொறுப்பாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் இந்த வேலைத் திட்டத்தின் கீழ் பயிற்சியில் பங்கேற்கும் அனைவருக்கும் பயிற்சிக் கையேடு மற்றும் பயிற்சிக் கையேடு உள்ளடங்கும் **DVD** வழங்கப்பட்டது.

முக்கியமாக 2018இல் இந்த வேலைத் திட்டமானது பின்வரும் மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டன. தமிழ் மொழியில் கடமையாற்றும் மாவட்டங்களுக்கு பயிற்சி மொடியூல் மற்றும் **DVD** தமிழ் மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டது.

தொடர் இலக்கம்	**மாவட்டம்**	**பங்கேற்றவர்களின் எண்ணிக்கை**
01	பொலன்னறுவை மாவட்டம்	**55**
02	மன்னார் மாவட்டம்	**70**
03	குருநாகல் மாவட்டம்	**96**
04	யாழ்ப்பாண மாவட்டம்	**97**
05	கிளிநொச்சி மாவட்டம்	**74**
06	திருகோணமலை மாவட்டம்	**80**
07	முல்லைத்தீவு மாவட்டம்	**47**
08	மொணறாகலை மாவட்டம்	**60**
09	அம்பாறை மாவட்டம்	**88**
10	வவுனியா மாவட்டம்	**60**
11	மட்டக்களப்பு மாவட்டம்	**170**

அட்டவணை **6.1: 2018** இல் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ள மாவட்டங்கள்



வவுனியா மாவட்டத்தில் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கம் வேலைத்திட்டம்




பொலன்னறுவை மாவட்டத்தில் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கம் வேலைத்திட்டம்




குருநாகல் மாவட்டத்தில் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கம் வேலைத்திட்டம்




மட்டக்களப்பு மாவட்டத்தில் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கம் வேலைத்திட்டம்

6.2.2 அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் தேசிய இளைஞர் அணி இணைந்து முன்னெடுக்கும் அனர்த்த முகாமைத்துவ இளைஞர் தொண்டர் குழுக்களை தாபிக்கும் வேலைத்திட்டம்

அனர்த்த முகாமைத்துவ செயன்முறையில் பயிற்றுவிக்கப்பட்ட மனிதவளம் அத்தியாவசியமான ஒரு அம்சமாகும். முக்கியமாக அனர்த்த நிலைமைகளின் போதும் அனர்த்த நிலைமைகளின் பின்னரும் தேடுதல் மற்றும் மீட்பு பணிகளில் பங்கெடுத்தல், முகாம்களுக்கு மக்களை அழைத்துச் செல்லுதல்,

ஊனமுற்றவர்கள், நோயாளர்கள், பெரியவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார் உள்ளிட்ட விசே' பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியவர்களை பாதுகாப்பாக அகற்றுதல் மற்றும் முகாம் முகாமைத்துவத்தின் போது அது பற்றிய பயிற்சியைப் பெற்ற இளைஞர்கள் அதிகமாக தேவைப்படுகிறார்கள்.

இதற்காக அனைத்து முகாமைத்துவ நிலையம் மற்றும் தேசிய இளைஞர் அணி இணைந்து தேசிய இளைஞர் அணியின் கீழ் முன்னெடுக்கப்பட்டும் 28 பயிற்சி நிலையங்களில் வருடாந்த பயிற்சி பெறும் இளைஞர் யுவதிகளுக்காக அனர்த்த முகாமைத்துவம் பற்றிய 03 நாள் பயிற்சியை வழங்கி அவர்களை நாட்டின் துவர் விடயத்தில் பங்கேற்கும் விதே குழுவாக மாவட்ட மட்ட முதல் கிராமிய மட்டம் வரையில் ஈடுபடுத்தும் நோக்கில் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கிறது. இந்த 03 நாள் பயிற்சி வேலைத்திட்டத்தில் தேடுதல் மற்றும் மீட்பு பணிகள். முதலுதவி, முகாம் முகாமைத்துவம், மக்களை அகற்றுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பிரயோகம் மற்றும் கோட்பாடு ரீதியான அறிவு வழங்கப்படுகிறது

2018 ஆம் ஆண்டினுள் முன்னெடுக்கப்பட்டுள்ள தொண்டர் இளைஞர் குழுக்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டங்கள்

இலக்கம்	மாவட்டம்	வேலைத்திட்டம்	பங்கேற்ற இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை
01	கம்பஹ	இளைஞர் தொண்டர் குழுக்களை தாபிக்கும் வேலைத்திட்டம் (திவுலபிட்டியஇ அத்தனகல்ல, யக்கல மற்றும் கட்டுநாயக்க இளைஞர் அணி நிலையம்)	370
02	கேகாலை	இளைஞர் தொண்டர் குழுக்களை தாபிக்கும் வேலைத்திட்டம் (கலிகமுவ மற்றும் கேகாலைஇளைஞர் அணி நிலையம்)	140
03	கண்டி	இளைஞர் தொண்டர் குழுக்களை தாபிக்கும் வேலைத்திட்டம் (கம்பொல, செங்கடகல மற்றும் யட்டினுவர இளைஞர் அணி நிலையம்)	260
04	நுவரெலியா	இளைஞர் தொண்டர் குழுக்களை தாபிக்கும் வேலைத்திட்டம் (வலப்பனை, ஹகுரங்கெத்த மற்றும் நுவாரெலிய இளைஞர் அணி நிலையம்)	195
05	காலி	இளைஞர் தொண்டர் குழுக்களை தாபிக்கும் வேலைத்திட்டம் ன (காலி, அக்மீமன மற்றும் நெழுவ இளைஞர் அணி நிலையம்)	150
06	மாத்தறை	இளைஞர் தொண்டர் குழுக்களை தாபிக்கும் வேலைத்திட்டம்	90
மொத்தம்			1205

அட்டவணை **6.2: 2018**வருடத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட இளைஞர் தொண்டு குழுக்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம்








கம்பஹ மாவட்ட தொண்டர் இளைஞர் குழுக்களுக்கான பயிற்சி -திவுலபிட்டிய

6.2.3 அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பில் பாடசாலை ஆசிரியர்களை அறிவுறுத்தும் தேசிய வேலைத்திட்டம்

இலங்கை முகம் கொடுத்துள்ள அனர்த்த அபாய நிலமை மற்றும் வருடாந்தம் நாங்கள் முகம் கொடுக்கும் அனர்த்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பாடசாலை சமூகத்தின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். முக்கியமாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பணியாட் குழுவினரது பாதுகாப்பு தொடர்பில் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் கல்வியமைச்சு இணைந்து ஒருங்கிணைந்து ஒரு வேலைத்திட்டமாக அனர்த்த அபாய முகாமைத்துவம் குறித்து பாடசாலை ஆசிரியர்களை முறையாக பயிற்றுவிக்கும் வேலைத்திட்டமொன்றை 2018இல் ஆரம்பித்துள்ளது.

இதன் மூலம் பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு அனர்த்தம் மற்றும் அனர்த்த அபாய முகாமைத்துவம் பற்றிய கோட்பாட்டு ரீதியான மற்றும் நடைமுறை ரீதியான அறிவு வழங்கப்படுவதுடன் அவ்வாறு பயிற்சி பெறும் ஆசிரியர்கள் பாடசாலை சமூகத்தை அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் அறிவுறுத்தி பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்கேற்புடனான வேலைத்திட்டங்களை அந்தந்த பாடசாலைகளில் முன்னெடுக்க வைப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும்.

இலக்கம்	மாவட்டம்	வேலைத்திட்டம்	பங்கேற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை
01	கொழும்பு	கல்வி வலய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வூட்டல் - மீபே கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம்	**50**
02	காலி	பாடசாலை மாணவர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம் - கரிடாஸ் நிறுவனம்	**105**
03	கம்பஹ	பாடசாலை மாணவர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம் - நிட்டபுவ கல்வி நிறுவனம்	**80**
மொத்தம்			**235**

அட்டவணை **6.3: 2018** இல் முன்னெடுக்கப்பட்டுள்ள பாடசாலை ஆசிரியர்களை அறிவுறுத்தும்




கல்வி வலய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வூட்டல் - மீபே கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம்

6.2.4 அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு கண்காட்சிகள் ஊடாக விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை கண்காட்சிகள் ஊடாகதேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் அறிவுறுத்துதல் இந்த வேலைத் திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். இதற்கமைய 2017ஆம் ஆண்டு மற்றும்2018ஆம் ஆண்டில் குறிப்பிட்ட நிதியை பயன்படுத்தி 09 கண்காட்சி தொகுதிகள் தயார் செய்யப்பட்டதுடன் 09 மாகாணங்கள் உள்ளடங்குமாறு தெரிவு செய்யப்பட்ட 09 மாவட்டங்களுக்கான குறிப்பிட்ட கண்காட்சி பொருட்கள் பொறுப்பானது மத்திய மாவட்ட ஒருங்கிணைப்பு பிரிவிற்கு கையளிக்கப்பட்டது. இதற்கமைய பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை கண்காட்சிகள் ஊடாக அறிவுறுத்தும் வேலைத்திட்டங்கள் தேசிய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் 2018இல் முன்னெடுக்கப்பட்டன.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை கண்காட்சிகள் ஊடாகதேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் அறிவுறுத்துதல் இந்த வேலைத் திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். இதற்கமைய 2017ஆம் ஆண்டு மற்றும்2018ஆம் ஆண்டில் குறிப்பிட்ட நிதியை பயன்படுத்தி 09 கண்காட்சி தொகுதிகள் தயார் செய்யப்பட்டதுடன் 09 மாகாணங்கள் உள்ளடங்குமாறு தெரிவு செய்யப்பட்ட 09 மாவட்டங்களுக்கான குறிப்பிட்ட கண்காட்சி பொருட்கள் பொறுப்பானது மத்திய மாவட்ட ஒருங்கிணைப்பு பிரிவிற்கு கையளிக்கப்பட்டது. இதற்கமைய பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை கண்காட்சிகள் ஊடாக அறிவுறுத்தும் வேலைத்திட்டங்கள் தேசிய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் 2018இல் முன்னெடுக்கப்பட்டன.

இலக்கம்	வேலைத்திட்டம்	மாவட்டம்	பங்கேற்றவர்களின் எண்ணிக்கை
01	மாவட்ட முகாமைத்துவ உதவியாளர்களுக்காக முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டம்	25 மாவட்டங்கள்	**50**
02	யொவுன் புரய (இளைஞர் நகரம்) கண்காட்சி	குருநாகல்	1700
03	கல்விக் கண்காட்சி	இரத்தினபுரி	700
04	சோபா பிரதிராவ கண்காட்சி	கம்பஹ	2000
05	உலக சிறுவர் தின கண்காட்சி	கேகாலை	15000
06	கல்விக் கண்காட்சி - அலோசியஸ் கல்லூரி	இரத்தினபுரி	10000

07	கல்விக் கண்காட்சி - சுலைமனியா கல்லூரி	கேகாலை	8000
08	X-Ban கல்விக் கண்காட்சி	கம்பஹ	15000
09	கல்விக் கண்காட்சி - கொலன்னாலை மகளீர் கல்லூரி	கொழும்பு	**2000**
10	கல்விக் கண்காட்சி - கேகாலை மகளீர் கல்லூரி	கேகாலை	8**000**
மொத்தம்			**62450**

அட்டவணை **6.4: 2018** இல் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை கண்காட்சிகள் ஊடாக அறிவுறுத்தும் வேலைத்திட்டம்




கண்காட்சிகளை நடாத்துதல் மற்றும் அவற்றை காட்சிப்படுத்துதல் தொடர்பல் மாவட்ட அனர்த்த உதவியாளர்களுக்காக விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம்




கேகாலை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட கல்விக் கண்காட்சி

6.2.5 முகாமைத்துவம் தொடர்பில் தொண்டர் குழுக்களை பயிற்றுவிக்கும் தேசிய வேலைத்திட்டம்

இலங்கை சாரணர் அமைப்பின் 18 வயதுக்கு மேற்பட்ட சாரணர்களுக்கு அனர்த்த முகாமைத்துவம் பற்றிய பயிற்சியை வழங்கி அவர்களை அனர்த்த முகாமைத்துவம் பற்றிய தொண்டர் குழுவாக பயிற்றுவித்து அந்தந்த மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அளவுகளில் இணைத்து அந்தந்த மாவட்டங்களில் ஏற்படக்கூடிய எந்த ஒரு அவசர நிலையின் போதும் அரச பொறிமுறைக்கு ஒத்துழைப்பு நல்கியவாறு ஒரு தொண்டர் குழுவாக தாபிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய எந்தவொரு அனர்த்த நிலைமையின் போதும் துரித கதியில் முகாமைத்துவம் செய்யக்கூடியவாறு அவர்களது பங்களிப்பினை பெறுதல் இந்த வேலைத் திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். இதற்கமைய கண்டி தர்மராஜ கல்லூரியில் அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 400 சாரணர்களுக்கு மூன்று நாள் அனர்த்த அபாய முகாமைத்துவம் பற்றிய பயிற்சி வேலைத்திட்டம் நடாத்தப்பட்டது.




களுத்துறை இராணுவ பயிற்சி பாடசாலையில் நடாத்தப்பட்ட படகுத் தொழிற்பாடு பற்றிய வேலைக்கிட்டம்

6.3 தேடுதல் மற்றும் மீட்பு வேலைத்திட்டங்கள்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளுக்கு ஏற்ப அவசர நிலைமைகளின் போது தேடுதல் மற்றும் மீட்பு பற்றிய பொறுப்புக்கள் முப்படை, பொலீஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு பிரிவுகளினால் மேற்கொள்ளப்படுகின்றது.முக்கியமாக முப்படையும் மற்றும் பொலிசார் இதன்போது முக்கிய பணியாற்றுகிறார்கள். ஆகையால் அனர்த்த முகாமைத்துவ பொறிமுறை தொடர்பிலான ஆழ்ந்த புரிந்துணர்வு தேடுதல் மற்றும் மீட்பு குழுவிற்கு இருக்க வேண்டும் ஆகையால் 2018இல் நிதியை பயன்படுத்தி தேடுதல் மற்றும் மீட்பு பற்றிய 11 வேலைத்திட்டங்கள் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டன.

இதற்கமைய அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் இன்று படகு மற்றும் தோணிகளின் பயன்பாடு தொடர்பிலான பயிற்சியினை முப்படை மற்றும் பொலிஸில் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக களுத்துறை கடற்படையில் உப தொகுதியில் நடாத்தியது. இப்பயிற்சியினை முப்படையும் மற்றும் பொலீசாரின் பங்கேற்பில் 25 மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 08 பயிற்சி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் இப்போது நடைமுறை ரீதியான மற்றும் அறிவானது 184 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டதுடன் மாதுரு ஓயா விசேட படையணி பாடசாலையில் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் மற்றும் மீட்பு இவைகளைத் திட்டங்கள்03இன் ஊடாக 186 உத்தியோகத்தர்களுக்கு பிரயோகம் மற்றும் கோட்பாட்டு அறிவு வழங்கப்பட்டது




மாதுரு ஓயா விசேட இராணுவ பயிற்சி பாடசாலையில் நடாத்தப்பட்ட தேடுதல் மற்றும் மீட்பு பயிற்சி வேலைத்திட்டம்

6.4 இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையினை வினைத்திறனாகவும் பயனுறுதி மிக்கதாகவும் நாட்டினுள் முன்னெடுக்கும் பொருட்டு மாவட்ட மட்டத்தில் பிரதேச ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வேலைத்திட்டம்

அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையினை வினைத்திறனாகவும் பயனுறுதி மிக்கதாகவும் முன்னெடுக்கும் பொருட்டு மாவட்ட மட்டத்தில் பிரதேச ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் ஊடக செயலமர்வானது நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அவசர அனர்த்த நிலைமைகளையும் போது ஊடகவியலாளர்கள் ஊடக மக்களை அறிவுறுத்துதல் மற்றும் அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்களது பொறுப்புக்கள், விடயப் பொறுப்பு தொடர்பில் இந்த ஊடக செயலமர்வுகள் மூலம் விழிப்புணர்வூட்டப்படுகிறது. முக்கியமாக அனர்த்தமொன்றின்போது பொதுமக்களுக்கு சரியான மற்றும் துரித தரவுகளை வழங்குவதன் மூலம் அவர்களுடைய உயிர் மற்றும் சொத்துக்களை பாதுகாப்பதற்காக தகவல் தொழில்நுட்பத்திலான முக்கியத்துவம் தொடர்பிலும் அத்தகைய சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்கள் பங்களிப்பு வழங்க வேண்டிய விதம் தொடர்பிலும் இந்த வேலைத் திட்டத்தின் போது அறிவுறுத்தப்பட்டார்கள்.

2018 ஆண்டு ஊடகவியலாளர்களை அறிவுறுத்தல் செயலமர்வுகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முழுமையான வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட்டதுடன், வளிமண்டலவியல் திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களம், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு ஆகிய நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட துறை தொடர்பில் அறிவுறுத்தப்படுகிறார்கள். 2018 ஆண்டு பிரதேச ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டங்களின் சுருக்கமான வேலைத்திட்ட விபரம் மற்றும் புகைப்படங்களில் கீழே காட்டப்பட்டுள்ளன.

2018இல் முன்னெடுக்கப்பட்ட மாவட்ட ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் செயலமர்வு

மாவட்டம்	பங்கேற்ற ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை
காலி	**70**
மொணறாகலை	**34**
மாத்தளை	**37**
கண்டி	45
அம்பாந்தோட்டை	**27**
வவுனியா	**41**
முல்லைத்தீவு	
மன்னார்	
மட்டக்களப்பு	**23**
கேகாலை	**40**
இரத்தினபுரி	**43**
மொத்தம்	**360**

அட்டவணை **6.5: 2018** இல் நடாத்தப்பட்டுள்ள மாவட்ட ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம்



மாவட்ட ஊடகவியலாளருக்கான விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டம்



மாவட்ட ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம் - கண்டி

6.5 ஊடகப் பேச்சுவார்த்தைகளை ஒழுங்கு செய்தல்

அனர்த்த முகாமைத்துவ நிலையமானது நிலவுகின்ற அவசர அனர்த்த நிலைமைகள் தொடர்பில் மக்களை அறிவுறுத்தும் பொருட்டு குறிப்பிட்ட தொழில்நுட்ப நிறுவனங்களை இணைத்துக்கொண்டு ஊடக பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கிறது. இதற்கமைய 2018இல் தென்மேற்கு பருவப்பெயர்ச்சிக் காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிலைமைகள் தொடர்பில் நாட்டு மக்களை அறிவுறுத்துதல், நிலவுகின்ற வறட்சி நிலைமை தொடர்பில் பொதுமக்கள் அறிவுறுத்துதல் மற்றும் அனர்த்த முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பில் பொதுமக்களை அறிவுறுத்துவதற்கான 10 ஊடகப் பேச்சுவார்த்தைகள் 2018இல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.



நிலவும் அனர்த்த நிலை தொடர்பில் ஊடகத்தை அறிவுறுத்துதல்

6.6 துண்டுப் பிரசுரங்கள்

கல்வி ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் மற்றும் தொழில்நுட்ப விடயங்களை எளிதாக முன் வைத்தவாறு மிகவும் கவர்ச்சிகரமாக தயார் செய்யப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் மூலம் மக்களை அறிவுறுத்துதல் மிகவும் வினைத்திறனான ஒரு செயல் நுணுக்கமாகும். அனர்த்த முகாமைத்துவ செயன்முறை தொடர்பில் பொதுமக்களை அறிவுறுத்தும் பெண் இத்திட்டங்களில் பல்வேறுபட்ட துறைகளில் தொடர்பில் அச்சிடப்படும் துண்டுப் பிரசுரங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. 2018இல் விழிப்புணர்வூட்டல் பிரிவினால் பின்வரும் துண்டுப் பிரசுரங்கள் சிங்கள தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

துண்டுப்பிரசுரம்	ஊடகம்		
	சிங்களம்	தமிழ்	ஆங்கிலம்
தென்மேற்கு பருவப்பெயர்ச்சி அனர்த்தங்கள் பற்றிய அறிவுறுத்தல்	√	√	-
அனர்த்த முகாமைத்துவ நிலையம்	√	√	√
பூமியதிர்ச்சி மற்றும் சுனாமி	√	√	√
பூமியதிர்ச்சி	√	√	-
விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம்	√	-	-

அட்டவணை **6.6:** அனர்த்தங்கள் ஒவ்வொன்றுக்குமாக தயார் செய்யப்பட்டுள்ள துண்டுப் பிரசுரங்கள்

தயார் செய்யப்பட்டு பொதுமக்களுக் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள துண்டுப் பிரசுரங்கள்










6.7 மாவட்ட மட்டத்திலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள்

2018 ஆம் ஆண்டில் 25 மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட 392 அனர்த்த அபாய முகாமைத்துவ பயிற்சி மற்றும் அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள் மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. இதற்காக ரூ6.3 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்டுள்ள இடர்களுக்கான அனைத்து அபாய நிலைமையை புரிந்துகொண்டு பின்வருமாறு வேலைத்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்டன.

தொடர் இலக்கம்	வேலைத்திட்டத்தின் பெயர்	வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை
01	முப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல்	**34**
02	அரசாங்க உத்தியோகத்தர்களை அறிவுறுத்துதல்	**57**
03	கிராமிய சமூகத்தை அறிவுறுத்துதல்	67
04	கடற்றொழிலாளர்களை அறிவுறுத்துதல்	**33**
05	மகளீர் அமைப்புக்களை அறிவுறுத்துதல்	**03**
06	கல்வித் துறையை அறிவுறுத்துதல்	**03**
07	உயிர் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள்	**22**
08	உள்ளூராட்சி நிறுவன உத்தியோகத்தர்களை அறிவுறுத்துதல்	**04**
09	தேடுதல் மற்றும் மீட்பு குழுக்களை அறிவுறுத்துதல்	**03**
10	தீப் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள்	**21**
11	வறட்சிஇ வெள்ள முகாமைத்துவம் பற்றிய அறிவுறுத்துதல்	**02**
12	இளைஞர் அணிகளை அறிவுறுத்துதல்	**01**
13	மாவட்டரீதியில் ஊடகவியலாளர்களை அறிவுறுத்துதல்	**02**
14	டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்	**03**
15	தோட்ட மக்களை மண்சரிவு அபாயம் தொடர்பில் அறிவுறுத்துதல்	**07**
16	முதலுதவி மற்றும் முகாம் முகாமைத்துவ வேலைத்திட்டம்	**70**
மொத்தம்		**392**

அட்டவணை **6.7:** மாவட்டங்களில் இனம் காணப்பட்டுள்ள அனர்த்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்



குறிப்பு **6.2:** மாவட்ட பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்களுக்காக செலவிடப்பட நிதி - 2018



அட்டவணை **6.3:** மாவட்ட பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்களுக்காக செலவிடப்பட்டுள்ள நிதி- 2018

2018 இல் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட வேலைத் திட்டங்களுக்கான புகைப்படங்கள்



அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பிலான பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர்தகளை அறிவுறுத்தும் வேலைதிட்டம் -122இராணுவ தலைமையகம் - வீரவில



அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பில் மகளீருக்கான விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் - யாழ்ப்பாணம்



அரச நிறுவன உத்தியோகத்தர்களுக்கான அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பிலான விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் - பொலன்னறுவை



இளைஞர் கழகத்தினருக்காக அகர்த்த அபாய முகாமைத்துவம் பற்றிய மூன்று நாள் வேலைத்திட்டம் - பொலன்னறுவை



அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பில் கிராமிய அனர்த்த குழுக்களை அறிவுறுத்துதல் - தலாவை



அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பில் முப்படை ஆளணியினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களை அறிவுறுத்துதல் -காலி



முகாம் முகாமைத்துவ பயிற்சி வேலைத்திட்டம்



அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பிலான வில்கமுவ கிராமிய அனர்த்த குழு அங்கத்தவர்களுக்கான முதலுதவி பயிற்வி வேலைத்திட்டம்



கடல்தொழிலாளர்களுக்கான விழிப்பர்ணர்வு



தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான விழிப்பர்ணர்வு புத்தளம் மாவட்டம்

6.8 அனர்த்த முகாமைத்துவ நிலைய பனியால் குழுவினரது கொள்ளளவு அபிவிருத்தி வேலைத்திட்டம்

அனர்த்த அபாய முகாமைத்துவத்தினை நாடு பூராவும் வினைத்திறனாகவும் பயனுறுதி மிக்கதாகவும் முன்னெடுப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலைய பணியாட் குழுவினருக்கு நவீன தொழில்நுட்ப அறிவு மற்றும் துறை சார்ந்த அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் முகமாக ரூ 03 மில்லியன் பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் பிரிவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியால் குழுவினரது கடமைகளுடன் நேரடியாகத் தொடர்புடைய 20 பாட நெறிகளும் 2018இல் ஆட் சேர்க்கப்பட்ட 38 புதிய முகாமைத்துவ உதவியாளர்களுக்கான இருவார பயிற்சி செயலமர்வுகளுக்கும் நிதி உதவி வழங்கினோம். மேலும் உத்தியோகத்தர்களுக்கு பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை பயில்வதற்காக ஒதுக்கியிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து இரண்டு உத்தியோகத்தர்களுக்கு அனர்த்த மதிப்பீடு பற்றிய பட்டப்பின் படிப்பு மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய கலைமானி பட்டத்தை பயில்வதற்காக நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டன.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகளில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட தலைமை அலுவலகத்தின் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான 02 தலைமைத்துவ பயிற்சி வேலைத்திட்டங்களும் அனைத்து முகாமைத்துவ நிலையத்தின் சகல சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கான இரு நாள் பயிற்சி வேலைத்திட்டமும் மாதுரு ஓயா இராணுவ பயிற்சிப் பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டது.




அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சாரதிகள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு மாதுறு ஊயா விசேட இராணுவ பயிற்சி பாடசாலையில் நடாத்தப்பட்ட இருநாள் பயிற்சி வேலைத்திட்டம்

	பாடநெறிகளிக் வகைப்படுத்தல்	பாடநெறிகளின் எண்ணிக்கை	பாடநெறி வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	செலவு (ரூ.மில்)
01	பாடநெறிசார்ந்த குறுங்கால பாடநெறிகள் மற்றும் பயிற்சி வேலைத்திட்டம் (கணக்கீடு /மனித வளம் /நிருவாகம்)	22	108	1.12
02	பட்டப்பின் படிப்புக்கான நிதி ஏற்பாடு	**02**	**02**	0.31
03	புதிய முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட உள்ளக பயிற்சி	**01**	**28**	0.27
04	தலைமைத்துவ பயிற்சி வேலைத்திட்டம்	**03**	**112**	1.30
	மொத்தம்	**28**	**250**	**3.00**

அட்டவணை **6.8:** அனர்த்த முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கொள்ளவு அபிவிருத்தி இயலவு




புதிய நியமனம் பெற்ற முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கான இருவார பயிற்சி வேலைத்திட்டம்




தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலகுகளின் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பொருள் மதிப்பீடு பற்றிய செயலமர்வு




அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் மாவட்ட முகாமைத்துவ உதவியாளர்களுக்காக முன்னெடுக்கப்பட்ட தலைமைத்துவ அபிவிருத்தி பற்றிய இருநாள் வேலைத்திட்டம் இரண்டு படிமுறைகளில் நடாத்தப்பட்டது.

6.9 தேசிய பாதுகாப்பு தினம்

2004 டிசெம்பர் மாதம் 26ஆந் திகதி இலங்கையை பாதித்த சுனாமியினால் உயிரிழந்த மக்களை நினைவு கூறும் முகமாக நாடளாவிய அனைத்து மத வேலைத்திட்டங்கள், சிரமதானப் பணிகள் மற்றும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள் டிசம்பர் 26ஆந் திகதி தேசிய பாதுகாப்பு தினத்தையொட்டி முன்னெடுக்கப்பட்டன. இதற்காக ஒரு மில்லியன் ரூபா நிதி 2018ஆம் வருடத்துக்காக ஒக்கீடு செய்யப்பட்டது.

சுனாமி, வெள்ளம், மண்சரிவு, கடும் புயல் போன்ற பல்வேறுபட்ட இடர்கள் காரணமாக பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த மக்களை நினைவு கூறுவதற்காக டிசெம்பர் 26ஆந் திகதி கொண்டாடப்படும் தேசிய பாதுகாப்பு தினத்தில் மக்களின் பங்கேற்புடன் சர்வ மத வழிபாட்டு நிகழ்வுகள்

மேற்கொள்ளப்பட்டன. அந்த தினத்தையொட்டியதாக அனர்த்த முன்னாயத்த சிரமதான பணிகளும் மக்களுடைய பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டன.

தேசிய பாதுகாப்பு தின தேசிய வேலைத்திட்டம், சுனாமிப் பேரழிவின் போது ஹிக்கடுவ பாருளிய பிரதேசத்தில் இடம்பெற்ற புகையிரத விபத்தினால் மரணமடைந்த 1700பேருக்கும் அதிகமான மக்களை நினைவு கூர்ந்து, பாருளிய சுனாமி ஞாபகார்த்தத்துக்கு அண்மையில் பொதுமக்கள், முப்படைகள், பொலீசார் மற்றும் அரசு உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டன.




தேசிய பாதுகாப்பு தின வேலைத்திட்டம் - ஹிக்கடுவ பருலிய சுனாமி நினைவுத்தூபிக்கு அண்மையில்




அனர்த்த முன்ஆயத்த சிரமதான வேலைத்திட்டம் - ஒக்வெல மற்றும் திஸ்ஸமஹாராம - அம்பாந்தோட்டைமாவட்டம்

07. அவசர கருமமாற்றல் பிரிவு

7.1 அவசர கருமமாற்ற நிலையம் (Emergency Operations Centre)

2011ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்திற்கு ஏற்ப அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் தாபிக்கப்பட்டுள்ள அவசர கருமமாற்ற பிரிவானது 24 மணி நேரம் முழுவதும் தொழிற்படுவதுடன் அனர்த்தங்கள் வளர்ச்சி அடையும் விதம், பதிலிருப்பு மேற்கொள்ள வேண்டிய மட்டம் ஆகியவற்றை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்கிறது. அனர்த்தத்தின் அளவானது உப தேசியமட்ட முகவர் நிறுவனங்களினால் கட்டுப்படுத்தக்கூடிய எல்லையை விஞ்சுகையில், தேசிய மட்டத்திலான அவசர கருமமாற்றல் பிரிவானது அவசர பதிலிருப்பு குழுக்களுடன் தொடர்புகொண்டு தேடுதல் மீட்பு மற்றும் அபாயத்துக்கு உட்பட்டுள்ள மக்களை அகற்றும் பணிகளை ஒருங்கிணைக்கின்றது.

அவசர கருமமாற்றல் நிலையத்தின் " தயார் நிலையில் இருத்தலை" தொடர்ச்சியாக முன்னெடுத்தல் மற்றும் அவசர அழைப்பு கூடத்தின் 117உடன் 24 மணி நேரம் பூராகவும் பணியாற்றுவதற்குத் தேவையான வளங்களை அதிகரிப்பதன் மூலம் அவசர கருமமாற்ற நிலையத்தின் பணிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் அனர்த்தத்தினால் ஏற்படும் தாக்கத்தை மதிப்பீடு செய்து அதற்கமைய ஏற்படக்கூடிய அனர்த்தங்களுக்கு பதிலிருக்கும் செய்யும் முறை பற்றிய தீர்மானத்தை மேற்கொள்ளுதல் இதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களுக்கு பதிலிருப்பதற்கான நடவடிக்கைகளைத் திட்டமிட்டு பல்வேறுபட்ட முன்னறிவித்தல் முறைகளை பயன்படுத்தி அதனூடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றன அவசர கருமமாற்றல் நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.




24 x 7 மணிநேர அவசர கருமமாற்றல் நிலையம்

7.2 அனர்த்தங்களுக்கு பதிலிருத்தல்

இலங்கையினுள் இடம்பெறும் பல்வேறுபட்ட அனர்த்தங்களுக்கு தொடர்ச்சியாக பதிலிருக்கும் ஒருங்கிணைப்பானது அவசர கர்மம் ஆற்றல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அனர்த்தத்தினால் ஏற்படும் தாக்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கமைய நிகழக்கூடிய அனர்த்தங்களுக்கு பதிலிருக்கும் செய்முறை தொடர்பிலான தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டு தொடர்ச்சியாக பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

2018ஆம் ஆண்டு ஜனவரி 01ஆந் திகதி முதல் டிசெம்பர் 31ஆந் திகதி வரையில் நாட்டினுள் இடம்பெற்ற பின்வரும் பாரிய சிறிய அளவிலான அனர்த்தங்களின் போது அவசர கருமமாற்றல் பிரிவினால் பதிலிருப்பு மேற்கொள்ளப்பட்டது.

தொழில்நுட்ப நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற பல்வேறுபட்ட அறிவித்தல்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறுபட்ட முன்னறிவித்தல் செய்முறைகள் ஊடாக பொதுமக்கள் அறிவுறுத்தப் படுவதுடன் அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்பினை குறைப்பதற்கு முழுநேர அவசர கருமமாற்ற பிரிவு நடவடிக்கைகளை மேற் கொள்கின்றது.

கடந்த காலப்பகுதியில் இடம்பெற்ற தென்மேல் மற்றும் வடகிழக்கு பருவப் பெயர்ச்சி காற்று இடம்பெற்ற மையினால் ஏற்பட்ட அனர்த்த நிலைமைகளுக்கு போன்றே பின்வரும் கடும் புயல் ஏற்பட்ட சந்தர்ப்பங்களிலும் அவ்வாறு செயற்பட்டு அனர்த்த அபாயங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் 2019இல் இடம்பெறக்கூடிய தென்மேல் மற்றும் வடகிழக்கு பருவப்பெயர்ச்சி காற்று நிலைமைக்கு பதிலிருப்பதற்கும் அவசர கர்மம் ஆற்றல் பிரிவானது முன்னாயத்தங்களை தயார் செய்கிறது.

2018ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியினுள் நாட்டை பாதித்த பிரதான மற்றும் சிறிய அனர்த்த நிலைமைகள் பின்வருமாறாகும்.

அனர்த்தம்	பிரதேச செயலகப் பிரிவுவாரியாக அறிக்கையிடப்படடுள்ள அனர்த்தங்களின்எண்ணிக்கை	காயங்கள்	உயிரிழப்புகள்	காணாமற்போதல்	வீட்டு சேதங்கள் (முழுமையான)	வீட்டு சேதங்கள் (பகுதியளவிலான)	பாதிக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை
வாகன விபத்துக்கள்	**78**	**97**	**75**	**0**	**0**	**0**	**176**
விலங்குகளின் தாக்கம்	**25**	**23**	**15**	**0**	**0**	**9**	**89**
படகுகள் கவிழ்தல்	**5**	**4**	**7**	**7**	**0**	**0**	**20**
இரசாயன பதார்த்தங்கள் மூலமான விபத்துக்கள்	**1**	**19**	**5**	**0**	**0**	**0**	**0**
கட்டிடங்கள் இடிந்து வீழ்தல்	**2**	**4**	**14**	**0**	**0**	**0**	**0**
மண்படை இடிந்து வீழ்தல்	**128**	**12**	**1**	**0**	**28**	**709**	**4618**
சூறாவளி	**16**	**0**	**0**	**0**	**89**	**978**	**5626**
வறட்சி	**127**	**0**	**0**	**0**	**0**	**0**	**925947**
நீரிழ் மூழ்குதல்	**44**	**1**	**58**	**1**	**0**	**0**	**69**
மின்னல் தாக்குதல்	**3**	**1**	**3**	**0**	**0**	**0**	**1**
தீப்பிடித்தல்	**79**	**5**	**2**	**0**	**56**	**31**	**444**
வெள்ளம்	**374**	**26**	**36**	**1**	**1008**	**12738**	**475240**
மண்சரிவு	**148**	**18**	**2**	**0**	**38**	**806**	**6864**
இடித்தாக்கம்	**125**	**18**	**18**	**0**	**6**	**199**	**1109**
கல் உருண்டு வீழ்தல்	**29**	**3**	**0**	**0**	**0**	**40**	**572**
கடும் புயல்	**703**	**65**	**14**	**15**	**200**	**7340**	**30654**
தரை கீழ்நோக்கி புதைதல்	**1**	**0**	**0**	**0**	**0**	1	3
மரங்கள் விழுதல்	**18**	**0**	**1**	**0**	**1**	**34**	**123**
சுவர் உடைந்து விழுதல்	**10**	**1**	**0**	**0**	**0**	**12**	**63**
மொத்த எண்ணிக்கை	**1788**	**250**	**285**	**24**	**1398**	**22188**	**1447000**

அட்டவணை **7.1: 2018**இல் ஜனவரி முதல் டிசெம்பர் வரையில் நாட்டைத் தாக்கிய சிறிய மற்றும் பாரிய அனர்த்தங்கள்

விசேட சம்பவங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

அனர்த்தம்	திகதி	மாவட்டம்	பீ. செ.பிரிவு	பாதிக்கப்பட்டுள்ள		மரணங்களின் எண்ணிக்கை	காயமடைந்தவர்களின் எண்ணிக்கை	சேதமடைந்துள்ளவீடுகளின் எண்ணிக்கை		ஏனைய
				குடும்பங்களின் எண்ணிக்கை	நபர்களின் எண்ணிக்கை			முழுமையான சேதம்	பகுதியளவிலான சேதம்	
கடும் புயல்	**2018.01.13**	கம்பஹ	திவுலபிட்டிய, அத்தனகல்ல	**671**	**3025**			**208**	**463**	
	2018.06.09	குருநாகல்	*மாஜ்பொத்த, உடுபந்தாவ, வாரியபொல,*	**263**	**842**			**05**	**258**	

			கணேவத்த, அலவ்வ, கொபெய்கனே							
	2018.06.19	குருநாகல்	*பண்டுவஸ்நுவர மேற்கு மற்றும் குளியாப்பிட்டி மேற்கு*	**81**	**275**				**81**	
	2018.07.11	கொழும்பு	ஹோமாகம, கெஸ்பாவ, மொறட்டுவ, பாதுக்க, இரத்மலான மற்றும் தெஹிவள	**263**	**849**				**262**	
	2018.08.02	அம்மபாறை	அம்பாறை மற்றும் சம்மாந்துறை	**263**	**1085**			**13**	**248**	
	2018.08.15	குருநாகல்	பொல்கஹவெல, அலவ்வ, வீரபுகெதர, மாஸ்பொத்த, நாரம்மல, குருநாகல், பண்டுவஸ்நுவர, கிழக்கு, குளியாப்பிட்டி கிழக்கு, பண்டுவஸ்நுவர மேற்கு மற்றும் குளியாப்பிட்டி மேற்கு	**279**	**1054**			**10**	**269**	
	2018.10.01	புத்தளம்	மஹகுபுக்கடவல, பள்ளம, நவகத்ஹேன, கருவலகஸ்வெவ, ஆரச்சிகட்டுவ, சிலாபம்	**623**	**2258**			**01**	**6154**	
கட்டிடங்கள் உடைந்து விழுதல்	**2018.02.14**	கொழும்பு	கிராண்பாஸ்			**07**	**02**			
தென்மேல் மற்றும் வடகிழக்கு பருவப்பெயர்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றம் மண்சரிவு	**2018.05.20**	களுத்துறை, மாத்தறை, இரத்தனபுரி, காலி , கேகாலை,கம்பஹ, அம்பாந்தோட்டை, கொழும்பு, மாத்தளை, கண்டி, வவுனியா,முல்லைத்தீவு, திருகோணமலை, நுவரெலியா, புத்தளம்,,மட்டக்ளப்புஈ பதுள்ளை, குருநாகல், மொணறாகலை, பொலன்னறுவ மற்றும் யாழ்ப்பாணம்		**44974**	**171687**	**24**	**13**	**121**	**5205**	**19519** குடும்பங்களைச் சேர்ந்த **75013** நபர்கள் **339** பாதுகாப்பு இடங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டார்கள்.
மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ளம், கடும் புயல், இடி மற்றும் மண்சரிவு	**2018.10.03**	களுத்துறை, காலி, கொழும்பு, கேகாலை, கண்டி, புத்தளம், நுவரெலியா, கம்பஹ, குருநாகல், அநுராதபுரம், இரத்தினபுரி, மன்னார், மாத்தறை, பதுள்ளை, மொணறாகலை		**18840**	**75689**	**12**	**18**	**50**	**2653**	
	2018.12.21 & 22	கிளிநொச்சி, முல்லைத்தீவு		**111079**	**35599**			**474**	**4522**	

